www.penakural.com

மலர்: 03 இதழ்: 08 ஜூன் 2025 Vol.: 03 Issue: 08 June 2025 ₹ 20/-

# பேனா குரல்

## PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்



## ஜம்மு - காஷ்மீரில் பல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை

## பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்


# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**




- Uninstallation
- Gas Filling
- Air Duct Cleaning

CONTACT US

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்

**PENA KURAL** தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 03 இதழ்: 08 ஜூன் 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : **நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

சிறப்பு ஆசிரியர் : **M. ஸ்ரீராம்**

கௌரவ ஆசிரியர் : **K. ராமசுப்ரமணியன்**

இணை ஆசிரியர் : **K. ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:

**துரை. சந்துரு, ந.மதிவாணன், வீ.அய்யனார், P.ஸ்டாலின், P.கார்த்திகேயன், S.மோகன்**

தலைமை நிருபர்கள்:

**R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், B.நவின்குமார், L.குமரேசன், H.காஞ்சன், சங்கரன்**

நிருபர்கள்:

**Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், S.ஜெயராஜ், K.மாரிதுரை, A.சரவணன்**

புகைப்பட நிருபர்கள்: **V.கவியரசன், கபில்**

ஓவியம் & புகைப்பட நிருபர்: **V.சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்கள்:

**M. குணசீலன்**, B.Com.,M.L., Government of India, Central Government Additional Standing Counsel

**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:

*Tamilni Printz & Graphics* - 8754582123



நிர்வாக அலுவலகம்:

**பேனா குரல்**

3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:

044-35906002, 8754582123

info@penakural.com

news@penakural.com

www.penakural.com



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, மற்றும் விளம்பரங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *




# வானில் பறந்த நம்பிக்கையின் வீழ்ச்சி!

அகமதாபாத் வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்ட 32 விநாடிகளுக்குள் கீழே விழுந்த ஏர் இந்தியா போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம் 265 உயிர்களை பறிகொடுத்தது. பயணிகள், ஊழியர்கள், மற்றும் அருகிலிருந்த விடுதியில் இருந்தவர்கள் உயிரிழந்தனர். விமானம் முழுமையாக எரிபொருள் நிரப்பப்பட்டிருந்ததால் தீப்பற்றியது வியப்பில்லை.

இந்தியாவில் இது இரண்டாவது பெரிய விமான விபத்து. 1996 ஹரியாணா விபத்துக்குப் பிறகு இதுபோன்ற விபத்து நிகழவில்லை. அதன் பின் வானூர்திகளுக்கு 'டிராஃபிக் கொலிஷன் அவாய்டன்ஸ் சிஸ்டம்' பொருத்தப்பட்டது. விபத்துகள் அரிதாகவே நிகழ்ந்தாலும், 2020 ஆகஸ்ட் பிறகு இத்தகைய பெரிய விபத்து இதுவே.

2011-ல் அறிமுகமான போயிங் 787 ட்ரீம்லைனர் இதுவரை பாதுகாப்பாக கருதப்பட்டது. உலகம் முழுவதும் இயங்கும் 1,175 ட்ரீம்லைனர் விமானங்கள் 100 கோடிக்கும் மேற்பட்ட பயணிகளை பாதிப்பு இல்லாமல் பயணிக்க வைத்துள்ளன. ஆனால் இப்போது முதல்முறையாக இந்த வகை விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விமான சேவைகளும் பயணிகளும் அதிகரிக்கின்றன, ஆனால் விபத்துகள் குறைவடைந்துள்ளன. 2000-ல் ஆண்டுக்கு 1,148 விபத்துகள் இருந்த நிலையில், 2024-ல் 244-க்கு குறைந்துள்ளன. தொழில்நுட்ப மேம்பாடுகள் பாதுகாப்பை மேம்படுத்தினாலும், விபத்துகளை முற்றிலும் தவிர்க்க முடியவில்லை.

இந்தியா உலகின் மூன்றாவது பெரிய விமான சேவை நாடாக உருவெடுத்து வரும் நிலையில், விபத்துகள் ஏற்கக்கூடியது அல்ல. 'உடான்' திட்டத்தின் மூலம் சாதாரண மக்களுக்கும் விமான சேவை சாத்தியமாகும் சூழல் உருவாகியுள்ளது.

விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை . பறவை மோதல், இயந்திர கோளாறு, மனிதத் தவறு என விசாரணை நடக்கிறது. பாதுகாப்பான விமானப் பயணம் உறுதியாக வேண்டும் என்பதே இந்நிகழ்வின் முக்கியப் பாடமாகும்.

– ஆசிரியர்

# உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய ஐந்து பெண்கள், ஐந்து சிறுவர்கள் அடங்கிய என்சிசி குழுவை பாதுகாப்பு அமைச்சர் பாராட்டினார்



2025 மே 18 அன்று எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய ஐந்து பெண்கள் மற்றும் ஐந்து சிறுவர்கள் அடங்கிய தேசிய மாணவர் படை (NCC) மலையேற்றப் பயணக் குழுவை பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று 12.06.2025 அன்று பாராட்டினார். கர்னல் அமித் பிஷ்ட் தலைமையிலான குழுவின் துணிச்சல், மன உறுதி மற்றும் தேசபக்தியைப் போற்றும் வகையிலும், எந்தவொரு காயமும் இல்லாமல் மிகக் கடுமையான சூழ்நிலையிலும் இந்த சாதனையை எட்டியதற்காகவும் ரூ.10 லட்சத்திற்கான காசோலையை அவர்களுக்கு அமைச்சர் வழங்கினார்.

புது தில்லியின் சவுத் பிளாக்கில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, தேசிய மாணவர் படையினர் தங்கள் பயணத்தின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். கடுமையான பயிற்சி, நுணுக்கமான திட்டமிடல் மற்றும் சந்தித்த சவால்களை அவர்கள் விவரித்தனர். தைரியம், ஒழுக்கம், மீள்தன்மை ஆகியவற்றிற்கான தேர்வில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றதற்காக, அணியினரை பாதுகாப்பு அமைச்சர் பாராட்டினார்.







இளைய தலைமுறையினருக்கு உத்வேகத்தின் ஆதாரமாக தேசிய மாணவர் படையினர் இருப்பதாகக் குறிப்பிட்ட திரு. ராஜ்நாத் சிங், இந்தப் பயணத்தின் மூலம், உலகின் மிக உயர்ந்த சிகரம் கூட நாட்டின் இளைஞர்களுக்கு எல்லையாக இருக்காது என்ற செய்தியை துணிச்சலான தேசிய மாணவர் படையினர் வெளிப்படுத்தியுள்ளனர் என்று கூறினார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் போது காட்டிய அதே தைரியத்துடனும் உறுதியுடனும் தேசிய மாணவர் படையினர் எதிர்கால சவால்களை எதிர்கொள்வார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தேசிய மாணவர் படையினரிடையே தேசிய உணர்வை ஏற்படுத்துவதற்கும், அவர்களை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், வலிமையாக்குவதன் மூலமும், சமூகத் திறன்களை வளர்ப்பதன் மூலமும் அவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் தேசிய மாணவர் படை மேற்கொண்ட முயற்சிகளை பாதுகாப்பு அமைச்சர் பாராட்டினார். இந்த முயற்சியில் அவர்களுக்கு ஆதரவளித்த தேசிய மாணவர் படையினரின் குடும்ப உறுப்பினர்களையும் அவர் பாராட்டினார்.

- P. **கார்த்திகேயன்**

# அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழு பிரதமருடன் சந்திப்பு



'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து விளக்குவதற்காக வெளிநாடுகளுக்கு சென்று திரும்பிய அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர், பிரதமர் மோடியை டெல்லியில் நேற்று சந்தித்தனர். அப்போது இந்தியாவின் ஒற்றுமையை உலகிற்கு உணர்த்தியதற்கு எம்.பி.க்கள் குழுவினருக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது, பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி மக்கள் 26 பேர் பலியானார்கள். இதற்கு பதிலடியாக பாகிஸ்தானுக்கும், அந்த நாட்டில் உள்ள பயங்கரவாதிகளுக்கும் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தக்க பாடம் புகட்டப்பட்டது.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை பற்றியும், பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை பற்றியும் உலக நாடுகளுக்கும், நட்பு நாடுகளுக்கும் விளக்கிக்கூற, அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் அடங்கிய 7 குழுக்களை மத்திய அரசு அமைத்தது.

இந்த குழுக்களுக்கு பா.ஜனதா கட்சியின் ரவிசங்கர் பிரசாத், பைஜெயந்த் பாண்டா, காங்கிரசைச் சேர்ந்த சசிதரூர், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த சஞ்சய் ஜா, சிவசேனாவைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் ஷிண்டே, தி.மு.க.வைச் சேர்ந்த கனிமொழி மற்றும் தேசிவாத காங்கிரசின் சுப்ரியா சுலே ஆகியோர் தலைமை தாங்கினர்.

இவர்கள் தனித்தனி குழுக்களாக அமெரிக்கா, பனாமா, கயானா, பிரேசில், கொலம்பியா, ஸ்பெயின், கிரீஸ், ஸ்லோவேனியா, லாட்வியா, ரஷியா, எகிப்து, கத்தார், எத்தியோப்பியா, தென்னாப்பிரிக்கா, சவுதி அரேபியா, குவைத், பக்ரைன், அல்ஜீரியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, டென்மார்க், இந்தோனேசியா, மலேசியா, தென் கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், அரபு நாடுகள், லைபீரியா, காங்கோ, சியரா லியோன், மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என 33-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சென்றனர். அங்கு அந்த நாட்டு பிரதிநிதிகளை சந்தித்து இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கினர்.

இந்த பயணம் வெற்றிகரமாக முடிந்ததும், அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர் இந்தியா திரும்பினர். பின்னர் அவர்கள் வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கரை சந்தித்து தங்களது பயண விவரங்கள் பற்றி கூறினர்.இதையடுத்து அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர், பிரதமர் மோடியை சந்தித்தனர். இந்த சந்திப்பு டெல்லியில் உள்ள பிரதமரின் இல்லத்தில் நேற்று இரவு நடைபெற்றது.

அப்போது அவர்களிடம் நலம் விசாரித்த பிரதமர் மோடி, வெளிநாட்டு பயணத்தின்போது நடந்தவற்றை கவனமாக கேட்டறிந்தார். கட்சி பாகுபாடு இன்றி நாட்டின் ஒற்றுமையை அவர்கள் எடுத்துரைத்த விதத்தை பாராட்டினார்.மேலும் குழுவில் இடம் பெற்று இருந்த எம்.பி.க்கள், பிரதமரிடம் அறிக்கைகளை வழங்கினர். பின்னர் பிரதமருடன் குழு புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். குழுவில் இடம்பெற்று இருந்த சுமார் 50 எம்.பி.க்களும் பிரதமருடன் தனியாகவும் பேசினார்கள். அவர்களை பிரதமர் தட்டிக்கொடுத்து பாராட்டினார்.

- B. நவின்குமார்

# சென்னை சென்ட்ரல் மெட்ரோவில் புத்தக பூங்காவையும், தமிழ்நாடு முழுவதும் 110 புதிய நூலகங்களையும்

## முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்





சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் ரூ.1.85 கோடியில் அமைக்கப்பட்டுள்ள சென்னை புத்தகப் பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். புத்தகப் பூங்காவில் பல்வேறு பதிப்பாளர்களால் வெளியிடப்படும் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழி நூல்களும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிட்டுள்ள உயர்கல்வி பாடநூல்கள், இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்கள், நாட்டுடைமை நூல்கள், போட்டித் தேர்வு நூல்கள், சிறார் இலக்கிய நூல்கள் மற்றும் பள்ளிப் பாடநூல்கள் ஆகியவை கிடைக்கும்.

இந்நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் திசைதோறும் திராவிடம், முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்பு திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட 84 நூல்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். மேலும், கலைஞரால் தொடங்கி வைக்கப்பட்டு, 50 ஆண்டுகளுக்கும் மேலாக கல்விப் பணியிலும் தமிழ்ப் பணியிலும் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் நூல்களை வெளி மாநிலத்தவர்கள் மற்றும் வெளிநாட்டினர் எளிதில் வாங்குவதற்கு வழிவகை செய்யும் வகையில் இணைய வழி விற்பனைக்கான மின்வணிக இணையதள வசதியையும் (www.tntext-booksonline.com) முதல்வர் நேற்று தொடங்கி வைத்தார்.

இதுதவிர பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், 821 பொது நூலகங்களுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல், தேவையான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், கணினி தொடர்புடைய சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு சிறப்பு நிதியுதவியாக 213 கோடியே 46 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில் ஒரு நூலகக் கட்டிடம் 500 சதுர அடி பரப்பளவில் என 821 பொது நூலகங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 352 நூலகக் கட்டிடங்கள் முதல்வரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போது அனைத்து மாவட்டங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் ரூ.24 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 110 கூடுதல் நூலகக் கட்டிடங்கள், ரூ.2 கோடியே 20 லட்சம் மதிப்பிலான நூல்கள், ரூ.1 கோடியே 59 லட்சம் மதிப்பிலான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான கணினி தொடர்புடைய சாதனங்கள், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ரூ.70 லட்சம் ரூபாய் செலவில் 1050 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள முழுநேர கிளை நூலக புதிய கட்டிடம் மற்றும் பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் என மக்கள் அதிகம் கூடும் இடங்களில் 49.78 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள 70 சிறப்பு நூலகங்கள் என மொத்தம் ரூ.29.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நூலகங்கள் மற்றும் நூலகக் கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

**அறிவை பரிமாறிக்கொள்ள புத்தக பூங்கா**

இனி, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் சந்தித்துக்கொள்ளும் உறவுகளும் நட்புகளும், அன்பை பரிமாறிக்கொள்வதை போல, புத்தகங்களை கொண்டு அறிவை பரிமாறிக்கொள்ள சென்னை புத்தக பூங்காவை தொடங்கியுள்ளோம். சிந்தனையை உயர்த்திடும் நூல்கள் நமது (வாழ்க்கை) பயணங்களில் துணையாகட்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**- சரவணன் @ மணிகண்டன்,**

# கல்வராயன் மலைப்பகுதியிலிருந்து ஐ.ஐ.டி நோக்கி...

# பழங்குடியின மாணவி ராஜேஸ்வரி சாதனை!






கல்வராயன் மலைப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மாணவி ராஜேஸ்வரி, JEE ADVANCED 2025 தேர்வில் சிறப்பான வெற்றி பெற்று, நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றான இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) உயர் கல்வி பயில தகுதி பெற்றுள்ளார்.

சேலம் மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மாணவி ராஜேஸ்வரி, JEE ADVANCED 2025 தேர்வில் சிறப்பான வெற்றி பெற்று, நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றான இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) உயர் கல்வி பயில தகுதி பெற்றுள்ளார். இது, அவரின் குடும்பத்திற்கும், மலைவாழ் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

**தந்தையின் கனவை மெய்ப்பித்த மகள்:**

ராஜேஸ்வரியின் இந்த வெற்றிக்குப்பின்னால் ஒரு நெகிழ்ச்சியான கதை உள்ளது. கடந்த ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தன் தந்தையை இழந்த ராஜேஸ்வரி, அந்த சோகமான சூழலிலும் தளராமல், தனது தந்தையின் கனவை மெய்ப்பிக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் படித்து வந்துள்ளார். குடும்பத்தின் ஆதரவும், ராஜேஸ்வரியின் அயராத உழைப்பும் இந்த சாதனையை எட்ட உதவியுள்ளன.

**சவால்களின் சரிவு கல்விப் பயணத்தின் பின்னணி:**

கல்வராயன் மலைப்பகுதியிலிருந்து வரும் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. அடிப்படை வசதிகள், இணைய அணுகல், மற்றும் உயர்தர பயிற்சி மையங்கள் போன்றவை அவர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. இத்தகைய சவால்களை எதிர்கொண்ட போதிலும், ராஜேஸ்வரி தனது இலக்கை அடைய உறுதியுடன் போராடியுள்ளார். அவரது விடாமுயற்சி, கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தன்னம்பிக்கையுடன் செயல்பட்டது, இந்த வெற்றிக்கு வழிவகுத்துள்ளது.

**சமூகத்திற்கு ஒரு முன்னுதாரணம்:**

ராஜேஸ்வரியின் இந்த சாதனை, பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பல மாணவர்களுக்கு ஒரு பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது. கல்வி, விடாமுயற்சி, மற்றும் உறுதியான இலக்கு இருந்தால் எந்தத் தடைகளையும் கடந்து சாதிக்க முடியும் என்பதை ராஜேஸ்வரி நிரூபித்துள்ளார். இவர் ஐஐடி போன்ற ஒரு உயர்கல்வி நிறுவனத்தில் நுழைவது, மலைவாழ் சமூகங்களில் கல்விக்கான விழிப்புணர்வையும், நம்பிக்கையையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜேஸ்வரி தனது ஐஐடி பயணத்தை விரைவில் தொடங்கவுள்ளார். அவரது இந்த வெற்றி, வருங்கால சந்ததியினருக்கு ஒரு பிரகாசமான பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

- R.**ஹரிகிருஷ்ணன்**

# ஜம்மு - காஷ்மீரில் பல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை

## பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்




ஜம்மு - காஷ்மீரின் கத்ராவில் 06.062025 அன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி ரூ.46,000 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள பல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், நிறைவடைந்த திட்டங்களைத், தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்தார். துணிச்சலான வீர ஜோராவர் சிங்கின் மண்ணுக்கு வணக்கம் செலுத்திய அவர், இன்றைய நிகழ்வு இந்தியாவின் ஒற்றுமை மற்றும் உறுதிப்பாட்டின் ஒரு பெரிய கொண்டாட்டம் என்று குறிப்பிட்டார். மாதா வைஷ்ணோ தேவியின் ஆசீர்வாதத்துடன், காஷ்மீர் பள்ளத்தாக்கு இப்போது இந்தியாவின் பரந்த ரயில்வே கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்று திரு மோடி கூறினார்.

“நாங்கள் எப்போதும் ஆழ்ந்த பயபக்தியுடன் அன்னை பாரதியை வணங்கி வருகிறோம், ‘காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை’ என்று கூறி வருகிறோம். இன்று இது நமது ரயில்வே கட்டமைப்பிலும் கூட ஒரு யதார்த்தமான நடைமுறையாகிவிட்டது” என்று பிரதமர் கூறினார், உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் பாதை திட்டம் வெறும் பெயரல்ல, ஜம்மு-காஷ்மீரின் புதிய வலிமையின் சின்னமாகவும், இந்தியாவின் வளர்ந்து வரும் திறன்களுக்கு ஒரு சான்றாகவும் உள்ளது என்று அவர் கூறினார். பிராந்தியத்தில் ரயில் உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டிற்கு இணங்க, அவர் செனாப் மற்றும் அஞ்ஜி ரயில் பாலங்களைத் திறந்து வைத்தார். மேலும் வந்தே பாரத் ரயில்களைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இது ஜம்மு-காஷ்மீருக்குள் இணைப்பை மேம்படுத்துகிறது. கூடுதலாக, ஜம்முவில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரிக்கும் திரு. மோடி அடிக்கல் நாட்டினார், பிராந்தியத்தில் சுகாதார வசதிகளை வலுப்படுத்துவதற்கான அரசின் உறுதிப்பாட்டை அவர் வலுப்படுத்தினார், ரூ 46,000 கோடி மதிப்புள்ள திட்டங்கள் ஜம்மு-காஷ்மீரில் வளர்ச்சியை துரிதப்படுத்தும், முன்னேற்றம் மற்றும் செழிப்பை ஊக்குவிக்கும் என்றும் அவர் கூறினார். பிரதமர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து, வளர்ச்சி மற்றும் மாற்றத்தின் இந்த புதிய சகாப்தத்திற்கு மக்களை வாழ்த்தினார்.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள தலைமுறைகள்




ரயில்வே இணைப்புக்காக நீண்ட காலமாகக் கனவு கண்டிருந்ததை சுட்டிக்காட்டிய திரு. மோடி இன்று அந்தக் கனவு நனவாகியுள்ளது என்று கூறினார். முதலமைச்சர் உமர் அப்துல்லாவின் சமீபத்திய அறிக்கையைக் குறிப்பிட்ட பிரதமர், ஏழாம் அல்லது எட்டாம் வகுப்பு மாணவராக இருந்தபோதிலேயே, திரு அப்துல்லா இந்தத் திட்டம் நிறைவடையும் என்று எதிர்பார்த்திருந்தார் என்று குறிப்பிட்டார். இந்த நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது ஜம்மு காஷ்மீரில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு ஒரு வரலாற்று தருணத்தைக் குறிக்கிறது, இது மேம்பட்ட இணைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்று திரு மோடி வலியுறுத்தினார்.

இந்த லட்சிய ரயில்வே திட்டம் தங்கள் ஆட்சிக் காலத்தில் வேகம் பெற்று இப்போது வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது தங்கள் அரசுக்கு ஒரு பாக்கியம் என்று கூறிய திரு மோடி, சவாலான நிலப்பரப்பு, தீவிர வானிலை மற்றும் மலைகளில் விழும் பாறைகள் போன்ற சவால்கள், திட்டத்தை மிகவும் கடினமாகவும், சவாலாகவும் மாற்றியதாகக் குறிப்பிட்டார். இருப்பினும், தங்கள் அரசு தொடர்ந்து சவால்களை நேருக்கு நேர் எதிர்கொள்ளவும், அவற்றை உறுதியுடன் சமாளிக்கவும் பழகிவிட்டது என்று அவர் குறிப்பிட்டார். ஜம்மு காஷ்மீரில் நடைபெற்று வரும் அனைத்து வானிலைகளுக்கும் ஏற்ற ஏராளமான உள்கட்டமைப்பு திட்டங்கள் இந்த உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன என்று பிரதமர் குறிப்பிட்டார். ச

மீபத்தில் திறக்கப்பட்ட சோன்மார்க் சுரங்கப்பாதை மற்றும் செனாப் பாலம் மற்றும் அஞ்ஜி பாலத்தின் மீது பயணித்த தமது அனுபவத்தை குறிப்பிடத்தக்க மைல்கற்கள் என்று அவர் மேற்கோள் காட்டினார். இந்தியாவின் பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் பொறியியல் திறமையையும், அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் பாராட்டிய திரு மோடி, உலகின் மிக உயரமான ரயில்வே வளைவுப் பாலமான செனாப் பாலம், இந்தியாவின் லட்சியத்திற்கு ஒரு சான்றாக நிற்கிறது என்று கூறினார். மக்கள் ஈபிள் கோபுரத்தைப் பார்க்க பாரிஸுக்குச் செல்கின்றனர். செனாப் பாலம் அதைவிட உயரத்தில் விஞ்சி நிற்கிறது. இது ஒரு முக்கியமான உள்கட்டமைப்பு சாதனையாக மட்டுமல்லாமல், வளர்ந்து வரும் சுற்றுலா தலமாகவும் அமைகிறது என்பதை பிரதமர் சுட்டிக்காட்டினார். இதேபோல், பிரதமர் அஞ்ஜி பாலத்தை ஒரு பொறி-யியல் அற்புதம் என்றும், இந்தியாவின் முதல் கேபிள் ரயில்வே பாலம் என்றும் விவரித்தார்.

இந்தக் கட்டமைப்புகள் கரடுமுரடான பிர் பஞ்சல் மலைகளில் உயர்ந்து நிற்கும் இந்தியாவின் வலிமைக்கான வாழும் சின்னங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தச் சாதனைகள் ஒரு வளர்ந்த தேசத்திற்கான இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், இந்தியாவின் முன்னேற்றக் கனவு எவ்வளவு மகத்தானது என்பதை நிரூபிக்கிறது என்றும் திரு மோடி தெரிவித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, தூய நோக்கங்களும் இடைவிடாத அர்ப்பணிப்பும்தான் இந்தியாவின் மாற்றத்துக்கான உந்து சக்திகள் என்று அவர் தெரிவித்தார்.


ஜம்மு காஷ்மீரின் முன்னேற்றத்துக்கு செனாப் பாலம் மற்றும் அஞ்ஜி பாலங்கள் உந்துசக்தியாகச் செயல்படும் என்பதை வலியுறுத்திய பிரதமர், "இந்த மைல்கல் திட்டங்கள் சுற்றுலாவை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் பயனளிக்கும் மற்றும் வணிகங்கள் மற்றும் தொழில்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும்" என்றார். ஜம்முவுக்கும் காஷ்மீருக்கும் இடையேயான மேம்படுத்தப்பட்ட ரயில் இணைப்பு உள்ளூர் தொழில்முனைவோர்களுக்கு புதிய கதவுகளைத் திறக்கும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்பதையும் அவர் எடுத்துரைத்தார். காஷ்மீரின் ஆப்பிள்கள் இப்போது குறைந்த செலவில் இந்தியா முழுவதும் உள்ள முக்கிய சந்தைகளை அடையும், இதனால் வர்த்தகம் மிகவும் திறமையானதாக இருக்கும் என்று திரு மோடி குறிப்பிட்டார்.

மேலும், உலர் பழங்கள் மற்றும் காஷ்மீரின் புகழ்பெற்ற பஷ்மினா சால்வைகள், பிற பாரம்பரிய கைவினைப்பொருட்கள், இப்போது நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் எளிதாக கொண்டு செல்லப்படும். இது பிராந்தியத்தின் கைவினைத் தொழிலை வலுப்படுத்தும். இந்த மேம்படுத்தப்பட்ட இணைப்பு ஜம்மு காஷ்மீரின் மக்களுக்கு பயணத்தை மிகவும் வசதியானதாக மாற்றும். இது இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு சுமூகமான இயக்கத்தை அனுமதிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

**- நா.வீ.சிவசங்கர்**

# சுற்றுச்சூழலை காக்கும் ஹீரோக்கள்தான் வனக்காவலர்கள்;

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!!




**முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் அவர்கள் 05.06.2025 அன்று சென்னை வர்த்தக மையத்தில் கற்றச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், சென்னை, கிண்டியில் 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்படவுள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்திற்கு அடிக்கள் நாட்டினார். இந்நிகழ்வின்போது மிதி, சற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னாக, மாண்புமிகு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ, இ.ஆ.ட்பட சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர.ராகுல் நாத் இ.ஆர், முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி. இ.வ.ப. முதன்மை தலைமை வளப்பாதுகாவலர் மற்றும் தலைமை மா உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, இ.வ.ப தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி, இ.ம.பட மற்றும் அரசு உயிர் அனுவவர்கள் உடனிருந்தனர்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 05.06.2025 அன்று சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில் ஆற்றிய உரையில்;-

உலக சுற்றுச்சூழல் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய

அமைச்சர் பெருமக்கள்
தங்கம் தென்னரசு அவர்களே,
தா.மோ. அன்பரசன் அவர்களே,
ராஜகண்ணப்பன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்இ. கருணாநிதி அவர்களே, கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, இ.ஆ.ப., அவர்களே, இயக்குநர் ராகுல்நாத், இ.ஆ.ப., அவர்களே, முதன்மை தலைமை பாதுகாவலர் ராகேஷ்குமார் அவர்களே, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்சீனிவாஸ் அவர்களே, மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் முனைவர் ஜெயந்தி அவர்களே, அன்பிற்குரிய சுந்தர்ராஜன் உள்ளிட்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்களே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே, அரசு உயர் அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரர்களே, பெருந்திரளாக வந்திருக்கக்கூடிய வனத்துறையின் காவலர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்று, உலக சுற்றுச்சூழல் நாள், மட்டுமல்ல, நாம் வாழும் பூமி கடும் நெருக்கடியில் இருக்கிறது என்கின்ற கடினமான உண்மையை உணர வேண்டிய நாளும் கூட! நம்முடைய

குழந்தைங்களின் எதிர்காலம், இப்போது நாம் செய்யும் செயல்களைப் பொறுத்துதான் அமையும் என்ற அந்த நினைவூட்டலோடு என்னுடைய உரையைத் தொடங்குவது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

காடுகள் என்றால் வரைபடத்தில் தெரிகின்றது போல பச்சை திட்டுகள் என்று சாதாரணமாக யாரும் நினைத்துவிடக் கூடாது. காடுதான் இந்த புவி மூச்சுவிட உதவுகின்ற நுரையீரல். அந்த காடுகளை பாதுகாப்பதற்கான மனிதவளத்தின் அவசரத் தேவையை உணர்ந்து, பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த காலிப் பணியிடங்களை நிரப்பிய நம்முடைய வனத்துறை அமைச்சருக்கும், செயலாளர் உள்ளிட்ட வனத்துறை மூத்த அதிகாரிகளுக்கும் முதலில் என்னுடைய நன்றியை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வனக்காவலர்கள் நியமன ஆணைகளை இன்று வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் தான் நம்முடைய காடுகளின் முதுகெலும்பு. எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், நம்முடைய சுற்றுச்சூழலை பாதுகாக்கும் ஹீரோக்கள் நீங்கள்தான்! இந்தத் துறையின் அமைச்சர்களான ராஜகண்ணப்பன் அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும், துறை செயலாளரான சுப்ரியா சாகு ஐ.ஏ.எஸ். அவர்களும் இதை Just ஏதோ பொறுப்பாக பார்க்காமல், தனிப்பட்ட முறையில் ஆர்வத்தோடும் அக்கறையோடும் செயல்பட்டு நம்முடைய அரசுக்கு பெருமை சேர்க்கிறார்கள். அதற்காக, என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக வேறு எந்த மாநிலத்திலும் "இத்தனை இயக்கங்கள், திட்டங்கள் இல்லை" என்று நான் அடித்து சொல்கிறேன்! அந்த அளவுக்கு கடந்த 4 ஆண்டுகளில் தொலைநோக்கோடு பல முன்னெடுப்புகளை செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். தமிழ்நாடு க்ரீன் கிளைமேட் கம்பெனி என்கின்ற, இந்தியாவின் மிகச்சிறந்த ஒருங்கிணைந்த காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் ஆளுகை கட்டமைப்பை உருவாக்கினோம். அதன் கீழ், நான்கு முதன்மை இயக்கங்களை அமைத்திருக்கிறோம்.தமிழ் நாடு சினிமா

முதலாவதாக, தமிழ்நாடு பசுமை இயக்கம் மூலமாக, 10 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டிருக்கிறோம். வனப்பரப்பை அதிகரித்திருக்கிறோம்.

இரண்டாவதாக, 'தமிழ்நாடு ஈரநில இயக்கம்' தொடங்கி, இந்தியாவிலேயே அதிகபட்சமாக ராம்சார் அங்கீகாரம் பெற்ற 21 ஈர நிலங்கள் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்று சாதனை படைத்திருக்கிறோம்.

மூன்றாவதாக, 'தமிழ்நாடு காலநிலை மாற்றத் திட்டம்' மூலமாக Carbon Emission-னை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட முக்கியமான பணிகளை செய்து கொண்டு வருகிறோம்.

நான்காவதாக, தமிழ்நாடு நெய்தல் மீட்சி திட்டம் மூலமாக, உலக வங்கியுடன் இணைந்து 1,675 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முக்கிய கடலோரப் பகுதிகளின் தாங்குதிறனை வலுப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இதுமட்டுமல்ல, கடந்த 4 ஆண்டுகளில், 7,000 ஹெக்டேருக்கும் அதிகமான 65 புதிய வன காப்பகங்களுக்கு அறிவிக்கை செய்து, சட்டப்பூர்வ பாதுகாப்பு அளித்திருக்கிறோம். அகத்தியமலை யானைகள் காப்பகம், தெற்கு காவிரி வனவிலங்கு காப்பகம், தந்தை பெரியார் வன உயிரின காப்பகம், கடலூரில், இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயம், நஞ்சராயன் பறவைகள் காப்பகம், கழுவேலி பறவைகள் காப்பகம் மற்றும் இந்தியாவின் முதல் "கடற்பசு காப்பகம்" ஆகிய 7 வன உயிரின சரணாலயங்கள் பாதுகாக்கப்பட்ட பகுதி வலையமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது நான் சொல்லியிருக்கும் அனைத்தும் ஒவ்வொரு வகையில் ஒரு ரெக்கார்டு!

2 ஆயிரத்து 403 ஹெக்டேர் பரப்பளவில், புதிய அலையாத்தி காடுகளை உருவாக்கி இருக்கிறோம். 1,207 ஹெக்டேர் தரங்குன்றிய சதுப்புநிலக் காடுகளை மீட்டெடுத்திருக்கிறோம். முக்கியமான "நீல கார்பன்" சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு புத்துயிர் வழங்கியிருக்கிறோம். இந்த வரிசையில், மன்னார் வளைகுடாவில் இருக்கும் தனுஷ்கோடியில், தமிழ்நாட்டின் முதல் கிரேட்டர் ஃபிளமிங்கோ சரணாலயம் குறித்த அரசு அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமையடைகிறேன்.

பல்லுயிர்ப் பெருக்கம், காலநிலை மாற்றம் - இந்த இரண்டுக்கும் இடையில் வலுவான தொடர்பு இருக்கிறது. இதை உணர்ந்து அதற்கேற்ப செயல்பட்டு வரும் முன்னோடி மாநிலமாக இருப்பது நம்முடைய தமிழ்நாடுதான்!. யானைகள் மற்றும் புலிகள் போன்ற காடுகளின்

ஆதாரமான உயிரினங்களைப் பாதுகாப்பதில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். மற்றொருபுறம் அதிகம் அறியப்படாத மற்றும் அருகி வரக்கூடிய உயிரினங்களை, "தமிழ்நாடு அருகிவரும் உயிரினங்கள் நிதியத்தின்" மூலம் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்.தமிழ் நாடு சினிமா

தொடக்கத்திலேயே நாம் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியைப் பற்றி சொன்னேன். அரசாங்கம் செயல்படுத்துகின்ற திட்டங்களால் மட்டும் இந்த நெருக்கடியைத் தீர்த்துவிட முடியாது. ஊர் கூடித்தான் தேர் இழுக்கவேண்டும்! அதனால்தான், தொழில்களுக்கான "தன்னார்வ பசுமை மதிப்பீட்டை" அறிமுகப்படுத்தி இருக்கிறோம். சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்கின்ற பொறுப்புணர்ச்சி, தொழில்துறை வளர்ச்சியின் மையமாக இருக்க வேண்டும். சுற்றுச்சூழலை காக்கின்ற செயல்பாடுகள், பொருளாதார வளர்ச்சி இலக்கோடு இணைந்து செயல்பட முடியும்!

நம்முடைய கனவு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மட்டும் கிடையாது. அது ஒரு பசுமை பொருளாதாரமாக இருக்க வேண்டும் என்பது தான் இந்த மாற்றத்தை வழி நடத்துவதற்கான கருவிகள், வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகளை நம்முடைய இளைஞர்களுக்கு வழங்க முதலமைச்சரின் பசுமை தோழர்களின் முதல் பேட்ச், இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்யப் போகிறார்கள். இரண்டாவது பேட்ச் விரைவில் இணைவார்கள். முதல் பேட்ச் தொடங்கிய பணிகளை அவர்கள் முன்னெடுத்துச் செல்வார்கள்.

இந்த ஆண்டிலிருந்து, நம்முடைய தனித்துவமான உயிரினங்களின் ஆராய்ச்சி, கல்வி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த தொடர்ச்சியாக புதிய பாதுகாப்பு மையங்கள் நிறுவப்படும். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பசுமைச் சான்றிதழ் பெறும் கட்டிடமாக இது உருவாகும்.

2021-ஆம் ஆண்டு, பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்த்துப் போராட "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்தை தொடங்கினோம். இது அரசின் திட்டமாக இருந்தால் போதாது! மக்கள் இயக்கமாக மாறவேண்டும்! அரசாங்கம் திட்டங்களை கொண்டுவர தான் முடியும். அதன் வெற்றி மக்கள் தங்களின் அன்றாட பழக்கங்களை மாற்றிக்கொள்வதில்தான் இருக்கிறது. தொடக்கத்தில் கஷ்டமாகதான் இருக்கும். ஆனால், வேறு வழி இல்லை. இந்த ஆண்டு சுற்றுச்சூழல் நாளின் 'தீம்' - "நெகிழி மாசுபாட்டை ஒழிப்போம்" என்பதுதான்.

இன்றைக்கு பிளாஸ்டிக் மாசுபாடு நம்முடைய பூமியை மூச்சுத் திணற வைத்துக்கொண்டு இருக்கிறது. வெளியே புறப்பட்டால், செல்போனை சார்ஜ் செய்துவிட்டுதான் எல்லோரும் புறப்படுகிறோம். அதுபோல, மறக்காமல் துணிப்பை மற்றும் தண்ணீர் பாட்டில் இல்லாமல், வீட்டை விட்டு வெளியே புறப்படமாட்டோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்வோம். இந்த சிறிய செயல் நம்முடைய கூட்டுமுயற்சிக்கு ஒரு தொடக்கமாக இருக்கட்டும்.

இன்றைய நாள், கடல் மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான பரப்புரையை விரிவுபடுத்துகிறோம். மேலும், தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களிலும் 'கைவிடப்பட்ட' மீன் வலைகளை அகற்றும் முயற்சியும் தொடங்கப்படுகிறது. 'தூய்மை மிஷன் - இது குப்பை மேட்டர் இல்லை'-என்று ஒரு இயக்கத்தை தொடங்கப் போகிறோம் என்று சமூக ஊடகங்களில் அறிவித்திருக்கிறோம்.

இந்தியா ஏன் அமெரிக்கா போன்று இல்லை? ஜப்பான் போன்று இல்லை? ஐரோப்பா போன்று இல்லை? என்று நிறைய சினிமாவில் கேள்வி கேட்பார்கள். அது போன்று ஆகவேண்டும் என்றால், அந்த மக்களுக்கு இருக்கக்கூடிய சுய ஒழுக்கம் நமக்கும் இருக்க வேண்டாமா? அதற்கான முதல்படிதான் குப்பைகளை தரம் பிரித்து போடுவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற இந்த தூய்மை மிஷன்!

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக அரசு அறிவிக்கின்ற அறிமுகப்படுத்தும் திட்டங்களை உங்கள் சொந்த திட்டமாக நினைத்து நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். நம்முடைய அரசை பொறுத்தவரை தீர்வுக்காக (solution) காத்திருப்பவர்கள் இல்லை. தீர்வை உருவாக்குகின்றவர்கள். இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்ல வேண்டும் என்றால், நாம் தான் தீர்வு! நம்முடைய திராவிட மாடல் அரசு, சமூக நீதிக்கான அரசு மட்டுமல்ல, சூழலியல் நீதிக்கான அரசாகவும் இருக்கும்! அதற்கு மக்களாகிய நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்!. இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- M.**திலிப் குமார்**

# மூன்று லட்சம் பேருடன் என்சிசி விரிவாக்கம் செய்யப்படும்:
# மத்திய இணையமைச்சர் திரு சஞ்சய் சேத்



போபாலில் ஜூன் 03, 2025 அன்று நடைபெற்ற தேசிய மாணவர் படையின் (முிசிசி-என்சிசி) சிறப்பு கூட்டு மாநில பிரதிநிதிகள், கூடுதல்/துணைத் தலைமை இயக்குநர்கள் மாநாட்டை மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் தொடங்கி வைத்தார். நாடு முழுவதும் மூன்று லட்சம் பேருடன் என்சிசி-யை விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும், பல மாநிலங்கள் இதற்கு ஏற்கெனவே தங்கள் ஒப்புதலை வழங்கி இருப்பதாகவும் அவர் கூறினார். தேவையான பயிற்சி உள்கட்டமைப்புகளை உருவாக்குவதை விரைவுபடுத்த உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசத்தை சிறப்பாகக் கட்டமைப்பதிலும் இளைஞர் மேம்பாட்டிலும் என்சிசி எனப்படும் தேசிய மாணவர் படை முக்கியப் பங்கு வகிப்பதாவும் அவர் கூறினார். முன்னாள் ராணுவ வீரர்களை என்சிசி பயிற்றுவிப்பாளர்களாகச் சேர்ப்பது, முன்னாள் படை வீரர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு வழிகளை வழங்குதல் உள்ளிட்ட அரசின் அண்மைக்கால முயற்சிகளை அவர் எடுத்துரைத்தார். தூய்மை இந்தியா இயக்கம், போதைப் பொருள் தடுப்பு இயக்கம் போன்ற தேசிய இயக்கங்களில் என்சிசி-யின் தீவிர ஈடுபாட்டை அவர் பாராட்டினார். 2025 மே 18 அன்று வெற்றிகரமாக சிகரத்தை அடைந்ததற்காக என்சிசி எவரெஸ்ட் பயணக் குழுவினரை அமைச்சர் பாராட்டினார், இது என்சிசி மாணவர்களின் துணிச்சல், மனஉறுதி ஆகியவற்றுக்கு ஒரு சக்திவாய்ந்த எடுத்துக்காட்டு என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய-மாநில அரசுகள் இதில் ஒத்துழைப்பைத் தொடர வேண்டும் என்று அழைப்பு விடுத்த திரு சஞ்சய் சேத், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விரிவாக்கத்திற்கான மனிதவளம், உள்கட்டமைப்பு, நிதியுதவி ஆகியவற்றில் மாநிலங்கள் தங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இளைஞர்களைச் சிறப்பாக வடிவமைப்பதிலும் நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதிலும் என்சிசி-யின் ஒருங்கிணைந்த பங்கை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நாடு முழுவதும் வலுவான பயிற்சி கட்டமைப்பையும், முகாம் உள்கட்டமைப்பையும் நிறுவுவதில் கவனம் செலுத்தி, என்சிசி செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் கல்வி, இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு ஆகிய துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், பாதுகாப்பு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், மாநில பிரதிநிதிகள், மாநிலங்களின் என்சிசி தலைவர்கள் பங்கேற்றனர்.

- H.காஞ்சன்

# வரப் போகும் பேராபத்து..!

# அலர்ட் கொடுக்கும் அன்புமணி!

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்படி தமிழக அரசுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2151.59 கோடியை மத்திய அரசு வழங்க மறுப்பதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை உச்சநீதிமன்றம் நிராகரித்து விட்டது. ஜூலை 13-ஆம் தேதி வரை உச்சநீதிமன்றத்திற்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்பாக இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு வாய்ப்பில்லை. இது தமிழ்நாட்டுக்கு பெரும் பின்னடைவு ஆகும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்," ஒருங்கிணைந்த கல்வித்திட்ட நிதியை பெறுவதில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு தமிழக அரசு தான் காரணமாகும். இந்த சிக்கலில் தமிழ்நாட்டிற்கு எப்போதோ கிடைத்திருக்க வேண்டிய நீதி இப்போது வரை தள்ளிக் கொண்டே போவதற்கு காரணம், தமிழக அரசின் சார்பில் காட்டப்பட்ட அலட்சியமும், அடுக்கடுக்காக இழைக்கப்பட்ட தவறுகளும் தான்.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் 2024-25ஆம் கல்வியாண்டுக்கான முதல் காலாண்டில், அதாவது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான 3 மாதங்களில் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.573 கோடியை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் முதல் பாதி வரை வழங்கவில்லை.

இந்த நிலையில், அதைக் கண்டித்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் 27-ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில், மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடருவது உள்ளிட்ட சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். அதன்பின் தொடர்ந்து வெளியிட்ட அனைத்து அறிக்கைகளிலும் இதையே வலியுறுத்தியிருந்தேன். கடந்த மே 22-ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் மீண்டும் ஒருமுறை இந்த யோசனையை வலியுறுத்தியிருந்தேன்.

ஆனால், தமிழக அரசோ, அதை மதித்து நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக வீண் அரசியலைச் செய்து காலத்தைக் கடத்தியது. இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்ததற்கும் இது தான் காரணம் ஆகும். நேற்றைய வழக்கு விசாரணையின் போது, எவ்வளவு காலமாக மத்திய அரசின் நிதி வரவில்லை என்றும், எப்போது வழக்கு தொடர்ந்தீர்கள் என்றும் உச்சநீதிமன்றத்தின் கோடை விடுமுறைக் கால நீதிபதி வினா எழுப்பினார். அதற்கு பதிலளித்த தமிழக அரசின் வழக்கறிஞர், கடந்த ஆண்டு முதலே நிதி வரவில்லை என்றும், கடந்த மே மாதம் 20-ஆம் தேதி தான் வழக்குத் தொடர்ந்ததாகவும் பதிலளித்தார். அதனடிப்படையில் தான் இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது.

பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தியவாறு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே தமிழக அரசின் சார்பில் வழக்குத் தொடரப்பட்டிருந்தால் அடுத்த

சில மாதங்களில் இந்த வழக்கில் தீர்ப்பு வந்திருக்கும்; தமிழகத்திற்கான நிதியும் கிடைத்திருக்கும். ஆனால், மக்கள் நலனை விட, அரசியல் லாபம் தேடுவதில் தான் திமுக அரசு தீவிரம் காட்டியது. அதனால் தான் 43 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, இந்த நிதிப்பற்றாக்குறையைக் காரணம் காட்டி கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின்படி, ஒரு லட்சம் குழந்தைகளுக்கு தனியார் பள்ளிகளில் இலவசக் கல்வி வழங்குவதையும் தமிழக அரசு தடுத்து விட்டது. இப்படியாக தமிழக அரசின் செயல்களால் பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

மாநிலங்களின் உரிமைகளை மீட்பது தான் தங்களின் லட்சியம் என்று கூறித் தான் திமுக ஆட்சிக்கு வந்தது. ஆனால், மாநில உரிமைகளைக் காப்பதற்காக எந்த நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்கவில்லை. சுமார் ஓராண்டு காலம் உறங்கிக் கொண்டிருந்து, மிகவும் தாமதமாக உச்சநீதிமன்றத்தை அணுகியதன் மூலம்




நிதியைப் பெறுவதில் தோல்வியடைந்து விட்டது.


தமிழக அரசு உடனடியாக மீண்டும் உச்சநீதிமன்றத்தை அணுகி, வழக்கை விரைவாக விசாரித்து தமிழகத்திற்கு நிதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி, கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் 25% இடங்களில் ஏழைக் குழந்தைகளைச் சேர்க்கவும், அவர்களுக்கு கல்வி வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என கூறியுள்ளார்.

- ந.மதிவாணன்

# பெண்கள், புற்றுநோய் பரிசோதனை செய்துகொள்வது அவசியம்: பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

சுகாதார துறை இயக்குனர் செல்வவிநாயகம் பேசியதாவது:-

சமீப காலங்களாக புற்று நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதுமட்டுமில்லாமல் புற்றுநோயை முற்றிய நிலையில் மட்டுமே கண்டு பிடிக்கக்கூடிய நிலை உள்ளது. இதனால், பாதிப்புகளும் அதிகமாகவே உள்ளது.



எனவே, தமிழக அரசு முன்கூட்டியே புற்றுநோய் பாதிப்புகளை கண்டறிவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் பொதுமக்கள் ஆஸ்பத்திரிகளுக்கு வரும்போது அவர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில், 4 மாவட்டங்களில் தொடக்க நியில் சோதனை என்ற அடிப்படையில் புற்றுநோய் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. இது நல்ல முடிவுகளை தந்துள்ளது. அடுத்தகட்டமாக இந்த திட்டத்தை கோவை, காஞ்சீபுரம், திருச்சி, வேலூர், மதுரை உள்ளிட்ட 12 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளோம்.

**பரிசோதனை அவசியம்:** களப்பணியாளர்கள் ஒவ்வொரு பகுதியில் உள்ள மக்களை கணக்கெடுத்து அவர்களை அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை சுகாதார நிலையங்களில் பரிசோதனை செய்துகொள்ள அறிவுறுத்தி வருகிறார்கள். நர்சுகளுக்கு இதற்கு தனியாக பயிற்சி அளிக்கப்படுகிறது. முதல்கட்டமாக வாய்ப்புற்றுநோய், கருப்பை நோய் ஆகியவை மீது மட்டுமே நாம் தற்போது கவனம் செலுத்தி வருகிறோம். இந்த 3 வகையான புற்றுநோயால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கைதான் அதிகளவில் உள்ளது.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாய் புற்றுநோயும், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மார்பகம் மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் பரிசோதனையும் செய்யப்படுகிறது. புற்றுநோயை முன் கூட்டியே கண்டுபிடித்துவிட்டால் அதை முழுமையாக குணப்படுத்த முடியும். எனவே, அனைத்து பெண்களும் புற்றுநோய் பரிசோதனை செய்துகொள்வது அவசியம். இதுகுறித்து எந்த அச்சமும் தேவையில்லை. புற்றுநோய் சிகிச்சைகள் இலவசமாகவே வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்

- Ba.சரவணன்

# உலகளாவிய இளம் விஞ்ஞானிகள் மாநாடு!





ஹைதராபாத் ஐஐடி-யில் நடைபெற்ற உலகளாவிய இளம் விஞ்ஞானிகள் மாநாடு மற்றும் உலகளாவிய இளையோர் அகாடமியின் ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று தலைமை தாங்கினார். ஹைதராபாத் ஐஐடி இயக்குநர் பேராசிரியர் பி.எஸ். மூர்த்தி; இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் தலைவர் பேராசிரியர் அசுதோஷ் சர்மா; ஹைதராபாத் ஐஐடி ஆளுநர்கள் குழுவின் தலைவர் திரு பி.வி.ஆர். மோகன் ரெட்டி மற்றும் பல பிற பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பல்வேறு உலக நாடுகளை சேர்ந்த இளம் விஞ்ஞானிகளை வரவேற்பதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியின் போது சேர்க்கப்பட்ட உலகளாவிய இளையோர் அகாடமியின் புதிய உறுப்பினர்கள் 30 பேருக்கு திரு. பிரதான் வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்வை நடத்த இந்தியாவைத் தேர்ந்தெடுத்த உலகளாவிய இளையோர் அகாடமியையும், ஹைதராபாத் ஐஐடியையும் தாம் பாராட்டுவதாக கூறினார். இந்த மாநாடு வெறும் விஞ்ஞானிகளின் கூட்டம் மட்டுமல்ல, மாறாக நம்பிக்கை, நோக்கம் மற்றும் பகிரப்பட்ட விதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மன்றம் என்றும் அவர் கூறினார்.



இந்தியாவைப் பொறுத்தவரை, வசுதைவ குடும்பகம் - ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் - வெறும் ஒரு முழக்கம் அல்ல, இதுவொரு வாழ்க்கை முறை என்று திரு பிரதான் கூறினார். அறிவியல் என்பது பகிர்தல் மற்றும் கூட்டாண்மை என்பதாக அமைய வேண்டும். காப்புரிமையாக மட்டுமே இருக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

விஞ்ஞானிகள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஒன்றிணைந்து, மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் சூழல்சார் அமைப்புகளையும் தீர்வுகளையும் உருவாக்குவதற்கு தற்போதைய தருணம் மிகவும் பொருத்தமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தாயின் பெயரில் ஒரு மரக்கன்று நடுதல் என்ற முயற்சியின் ஒரு பகுதியாக திரு பிரதான், மற்ற பிரமுகர்களுடன் இணைந்து, ஹைதராபாத் ஐஐடி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். இந்த பசுமை இயக்கத்தை வழிநடத்த அனைவரையும், குறிப்பாக வளாகங்களில் உள்ள மாணவர்களை அவர் ஊக்குவித்தார். நிலையான எதிர்காலத்திற்காக இயற்கையைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் ஈடுபடுமாறு மக்களை அவர் வலியுறுத்தினார்.

- D.ராஜேஷ்


Chandru Law Academy
Gandhi Road, Ambika Street,
(Near David School), Velachery, Chennai - 42.
Tamil Nadu : 073396 50446
Conducting
COACHING FOR MAGISTRATE / APP / DISTRICT JUDGE EXAMINATIONS
(All Major and Minor Acts)
COURSES
1 District Judge
2 Magistrate / Munsif
3 Assistant Public Prosecutor (APP)
4 All India Bar Examination (AIBE)
5 Common Law Admission Test (CLAT)
Offline Class / நேரடி வகுப்புகள்
Morning Batch :
Timings : 10.30 am to 1.30 pm
Separate Batches for
Week Days and
Saturday & Sundays
Online Class /
இணைய வழி வகுப்புகள்
Evening Batch :
Timings : 5 pm to 8.30 pm
Weekly 4 Days
@ ZOOM APP
@ VELACHERY
Chennai.
SRM
R. CHANDRASEKARAN
Advocate
Chandru Law Academy
Founder & Director
Note : No fees for specially challenged & Third gender person
For Registration Contact +91 73396 50446 / 90804 48871

# ‘ஒரு நாடு, ஒரு நோக்கம்: சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்ற அமைச்சகம் பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்’ என்ற பிரச்சாரத்தைத் தொடங்குகிறது




மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் இன்று 2025-ம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நாடு தழுவிய அளவில் ‘ஒரு நாடு, ஒரு நோக்கம்: பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்’ என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது. இந்தப் பிரச்சாரம் இந்தியாவின் முதன்மை முயற்சியான மிஷன் லைஃப் (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) உடன் இணைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், தனது சமூக ஊடக தளத்தில் ஒரு பிரச்சாரத்திற்கு முந்தைய காணொளியை வெளியிட்டு, பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர நீடித்த வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்வதன் மூலம் அனைவரும் கூட்டாக விழிப்புணர்விலிருந்து செயலுக்கு நகர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆண்டுதோறும் ஜூன் 5-ம் தேதி கொண்டாடப்படும் உலக சுற்றுச்சூழல் தினம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான உலகளாவிய விழிப்புணர்வையும் நடவடிக்கையையும் ஊக்குவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய தளமாக செயல்படுகிறது. மிஷன் லைஃப் கருப்பொருள்: ‘ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக்கை வேண்டாம் என்று சொல்லுங்கள்’, இந்த ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டங்கள் இந்த செய்தியை வலுப்படுத்துகிறது.

### பிரச்சாரத்தின் முக்கிய நோக்கங்கள்:

- பிளாஸ்டிக் மாசுபாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆதரவு
- ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக் உட்பட பிளாஸ்டிக் பொருட்களின் குறைவான பயன்பாடு மற்றும் கழிவுகள் உருவாக்கம் குறைத்தல்
- பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தல், சேகரித்தல், அகற்றுதல் மற்றும் மறுசுழற்சி செய்தல் மூலம் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் உட்பட பிளாஸ்டிக் கழிவுகளை நிர்வகித்தல்.
- ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கிற்கு நிலையான மாற்றுகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

### பிரச்சார செயல்பாடுகள் மற்றும் ஈடுபாடு

2025-ம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, இந்த பிரச்சாரம், பிளாஸ்டிக் மாசுபாட்டின் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், சுற்றுச்சூழல் நட்பு மாற்றுகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. சமூகக் கல்வி, நடத்தை மாற்ற முயற்சிகள் மற்றும் நிலையான பொருட்களில் புதுமை மூலம் மக்களை அதிக சுற்றுச்சூழல் நட்பு வாழ்க்கை முறைகளை நோக்கித் தூண்டுவதே இதன் நோக்கம்.

இந்த பிரச்சாரம் மத்திய அமைச்சகங்கள், மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், தொழில், பொது சமூகம் மற்றும் சமூகக் குழுக்கள் முழுவதும்

பரந்த அளவிலான செயல்பாடுகளைக் காணும். ஈடுபாட்டின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

- சமூக ஊடக பிரச்சாரங்கள், வீதி நாடகங்கள், பொது உறுதிமொழிகள், சுவரொட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள், மாரத்தான் போன்ற செயல்பாடுகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- கடற்கரைகள், பூங்காக்கள், ஆற்றங்கரைகள், வளாகங்கள், சுற்றுலாத் தலங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் கிராமப்புறங்களில் தூய்மைப்படுத்தும் இயக்கங்கள்.
- நிலையான நடைமுறைகள் மற்றும் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கிற்கான மாற்றுகள் குறித்த பட்டறைகள் மற்றும் இணையவழிப் பயிற்சிகள்
- மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து கலை மற்றும் கைவினைப்பொருட்கள், பள்ளிக் கண்காட்சிகள், ஹேக்கத்தான்கள், விநாடி வினாக்கள் மற்றும் கருப்பொருளை வலியுறுத்தும் விளையாட்டுகள் உள்ளிட்ட கல்வி நடவடிக்கைகள்
- உள்ளூர்மயமாக்கப்பட்ட கழிவுப் பிரிப்பு மற்றும் மறுசுழற்சி முயற்சிகளில் குடியிருப்போர் நலச் சங்கங்கள், நகராட்சி அமைப்புகள், அங்கன்வாடி பணியாளர்கள், கூட்டுறவு சங்கங்கள் போன்றவற்றின் சமூக மற்றும் நிறுவன ஈடுபாடு.

அரசு அமைச்சகங்கள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், இணைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் உட்பட பங்கேற்கும் அனைத்து பங்குதாரர்களும் தங்கள் முயற்சிகளை பிரச்சார கருப்பொருளுடன் இணைத்து 'மேரி லைஃப்' போர்ட்டலில் செயல்பாட்டு விவரங்களைப் பதிவேற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த முயற்சிகள் நிலையான வாழ்க்கைக்கான மக்கள் இயக்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

அனைத்து குடிமக்களும் இந்தப் பிரச்சாரத்தில் பங்கேற்று பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர பங்களிக்குமாறு அமைச்சகம் அழைப்பு விடுக்கிறது.

- K.**மாரிதுரை**

## வன உயிரினங்களை பாதுகாக்க 20,000 மாணவர்களுக்கு பயிற்சி



வன உயிரினங்கள் பாதுகாப்பு தொடர்பாக, 20,000 மாணவர்களுக்கு 3 கோடி ரூபாய் செலவில் குறுகிய கால சான்றிதழ் பயிற்சி அளிக்க, தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பில், வன உயிரினங்கள் பாதுகாப்பு, காட்டுத்தீ தடுப்பு, மனித - வன உயிரின மோதல் தடுப்பு என, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இதில், ஏற்கனவே உள்ள வனத்துறை களப்பணியாளர்களின் பங்களிப்பு போதுமானதாக இல்லை. எனவே, பள்ளி, கல்லூரி மாணவர்களை தயார்படுத்த புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, வனத்துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது:

படிப்புக்கு ஜே! பாதியில் விட்ட மாணவர்கள் 'கைகளில்' மீண்டும் புத்தகம்

தமிழகத்தில் பசுமை பாதுகாப்புக்காக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில், தேசிய பசுமை படை திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இதில், இணையும் மாணவர்கள், மரம் நடும் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர்.

அடுத்தகட்டமாக, வன உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் கணக்கெடுப்பு, காட்டுத்தீ மேலாண்மை, மனித - வன உயிரின மோதல் தடுப்பு போன்ற பணிகளுக்கும், மாணவர்களை தயார்படுத்த திட்டமிட்டு உள்ளோம்.

இதற்காக, 20,000 மாணவர்களுக்கு குறுகியகால பயிற்சி அளித்து, சான்றிதழ் வழங்கப்பட உள்ளது. இவர்களுக்கு, 'இளம் இயற்கை காவலர்கள்' என, சான்றிதழ் அளிக்கப்படும்.

இத்திட்டத்துக்காக தமிழக அரசு, 3 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. பயிற்சி பெறும் மாணவர்கள், தங்கள் படிப்பை முடிக்கும் நிலையில், வனத்துறையில் பல்வேறு நிலை பணிகளுக்கு, தங்களை தயார்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

- A.**சரவணன்**

# பெண்கள் பல்துறைகளிலும் முன்நிலையாக செயல்பட்டு, மேம்பட்ட இந்தியாவை உருவாக்கும் செயல்திட்டத்தில் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர்: பிரதமர்



வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் பெண்கள் ஆற்றிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான பங்களிப்பை பிரதமர் திரு. நரேந்திர மோடி எடுத்துரைத்துள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியில் அரசு கவனம் செலுத்துவதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நமது தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் மகள்கள் ஒவ்வொரு கட்டத்திலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்று பிரதமர் கூறினார். ஆனால் இன்று அவர்கள் வளர்ந்த இந்தியா என்ற தீர்மானத்தில் தீவிரமாகப் பங்கேற்பது மட்டுமல்லாமல், கல்வி முதல் வணிகம் வரை ஒவ்வொரு துறையிலும் முன்மாதிரியாக உள்ளனர். கடந்த 11 ஆண்டுகளில் பெண்கள் சக்தியின் வெற்றிகள் அனைத்து குடிமக்களுக்கும் பெருமை சேர்ப்பவையாக உள்ளன என்று திரு மோடி கூறியுள்ளார்.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் மூலம் மறுவரையறை செய்துள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார். இதில் தூய்மை இந்தியா இயக்கம் மூலம் கண்ணியத்தை உறுதி செய்தல், ஜன் தன் கணக்குகள் மூலம் நிதி உள்ளடக்கம் மற்றும் அடிமட்ட அளவில் அதிகாரமளித்தல் ஆகியவை அடங்கும்.

உஜ்வாலா திட்டம் பல வீடுகளுக்கு புகை இல்லாத சமையலறைகளைக் கொண்டு வந்த ஒரு மைல்கல் சாதனை என்று அவர் குறிப்பிட்டார். லட்சக்கணக்கான பெண்கள் தொழில்முனைவோர்களாகவும், தங்கள் கனவுகளை சுதந்திரமாகத் தொடரவும் முத்ரா கடன்கள் எவ்வாறு உதவியுள்ளன என்பதையும் அவர் எடுத்துரைத்தார். பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பெண்களின் பெயர்களில் வீடுகள் வழங்குவது அவர்களின் பாதுகாப்பு மற்றும்

அதிகாரமளிப்பு உணர்விலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெண் குழந்தையைப் பாதுகாப்பதற்கான ஒரு தேசிய இயக்கம் என்று அவர் வர்ணித்த பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் பிரச்சாரத்தையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

அறிவியல், கல்வி, விளையாட்டு, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆயுதப்படைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கி பலரை ஊக்குவித்து வருகின்றனர் என்பதை திரு மோடி உறுதிப்படுத்தினார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் தொடர் பதிவுகள் மூலம் பிரதமர் இந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்;

"கடந்த 11 ஆண்டுகளில், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மறுவரையறை செய்துள்ளது.

தூய்மை இந்தியா மூலம் கண்ணியத்தை உறுதி செய்வதிலிருந்து ஜன் தன் கணக்குகள் மூலம் நிதி உள்ளடக்கம் வரை பல்வேறு முயற்சிகள், நமது பெண்கள் சக்தியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. உஜ்வாலா திட்டம் பல வீடுகளுக்கு புகை இல்லாத சமையலறைகளைக் கொண்டு வந்தது. முத்ரா கடன்கள் லட்சக்கணக்கான பெண் தொழில்முனைவோர் தங்கள் சொந்த கனவுகளை நனவாக்கித் தொடர உதவியது. பிரதமர் வீட்டு வசதி திட்டத்தில் பெண்கள் பெயரில் வீடுகள் வழங்குவதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெண் குழந்தையைப் பாதுகாக்க பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் தேசிய அளவில் இயக்கத்தைத் தூண்டியது.

அறிவியல், கல்வி, விளையாட்டு, புத்தொழில்கள் மற்றும் ஆயுதப்படைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும், பெண்கள் சிறந்து விளங்கி பலரை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

- D.பாமா






# இந்திய விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல்:

## வேளாண் துறையின் முக்கிய செயல்பாடுகளும் சாதனைகளும்

“விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது, விவசாயச் செலவைக் குறைப்பது, விதை முதல் சந்தை வரை விவசாயிகளுக்கு நவீன வசதிகளை வழங்குவது இந்த அரசின் முன்னுரிமையாகும்.” - பிரதமர் நரேந்திர மோடி

விவசாயமானது இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் மையமாக உள்ளது. கோடிக் கணக்கானவர்களின் வாழ்க்கையை நிலைநிறுத்தி நாட்டின் அடையாளத்தை வடிவமைக்கிறது. கடந்த 11 ஆண்டுகளில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இந்தியாவின் விவசாயத் துறை விதை முதல் சந்தை வரை என்ற தத்துவத்தில் வேரூன்றி ஒரு ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாற்றம் சிறு விவசாயிகள், பெண்கள் தலைமையிலான குழுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் என அனைத்தையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது. அதே நேரத்தில் இந்தியாவை உலகளாவிய விவசாய முன்னணி நாடாகவும் ஆக்குகிறது.

நவீன நீர்ப்பாசனம் மற்றும் கடன் அணுகல் முதல் டிஜிட்டல் சந்தைகள் மற்றும் வேளாண் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் வரை, இந்தியா நவீன விவசாயத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, மனநிலை மாறிவிட்டது. விவசாயிகள் இப்போது இந்தியாவின் வளர்ச்சியின் முக்கிய பங்குதாரர்களாகவும் உந்துசக்திகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைக்கான பட்ஜெட் மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன. 2013-14ல் ₹27,663 கோடியிலிருந்து 2024-25-ல் ₹1,37,664.35 கோடியாக வேளாண் நிதி ஒதுக்கீடு உயர்ந்துள்ளது. பட்ஜெட் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட இந்த கணிசமான அதிகரிப்பு விவசாயத் துறையை மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.




- இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 2014-15 ஆம் ஆண்டில் 265.05 மில்லியன் டன்னிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் 347.44 மில்லியன் டன்னாக சீராக வளர்ச்சி பெற்றுள்ளது.
- முக்கிய பயிர்களில் அரிசி, கோதுமை, சோளம், பஜ்ரா, மக்காச்சோளம், ராகி, பார்லி, துவரம் பருப்பு, ஏனைய பருப்பு வகைகள், நிலக்கடலை,

சோயாபீன், கடுகு, எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி, சணல் ஆகியவை அடங்கும்.

- நெல், கோதுமை உள்ளிட்ட அனைத்துப் பயிர்களுக்கும் விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்ந்து அதிகரிக்கப்படுகிறது.
- கடந்த 11 ஆண்டுகளில், அரசாங்கம் பருப்பு வகைகள் துறையில் குறிப்பிடத்தக்க திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.
- மெகா உணவு பூங்கா திட்டத்தின் கீழ் மெகா உணவு பூங்காக்கள் 2014-ல் 2 இல் இருந்து 2025-ல் 41 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.
- நமோ ட்ரோன் தீதி என்பது பெண்கள் தலைமை-யிலான சுய உதவிக்குழுக்களை (SHGs) விவசாய சேவைகளை வழங்க ட்ரோன் தொழில்நுட்பத்துடன் இணைப்பதன் மூலம் அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு மத்திய துறை திட்டமாகும். இந்தத் திட்டம் 2024-25 முதல் 2025-2026 வரை-யிலான காலகட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15000 பெண்கள் சுய உதவிக்குழுக்களுக்கு விவசாய நோக்கங்களுக்காக விவசாயிகளுக்கு வாடகை சேவைகளை வழங்குவதற்காக ட்ரோன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளாவிய மீன் உற்பத்தியில் சுமார் 8% பங்கை இந்தியா கொண்டு. மீன் உற்பத்தி செய்யும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.




- பால்வளத் துறை சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதமான 5.7 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. இது உலக சராசரியான 2 சதவீதத்தை விட கணிசமாக அதிகமாகும். உலக பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. உலக உற்பத்தியில் 25% பங்களிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் பால் உற்பத்தி 63.56% அதிகரித்துள்ளது.
- தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் தேனீ வளர்ப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் இந்தியா 1.42 லட்சம் மெட்ரிக் டன் தேனை உற்பத்தி செய்து 79,929 மெட்ரிக் டன்களை ஏற்றுமதி செய்தது.



விவசாயிகள் இந்தியாவின் விவசாயத் துறையின் முதுகெலும்பாக உள்ளனர், இத்துறை தேசத்திற்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. முற்போக்கான சீர்திருத்தங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் வலுவான அரசு முயற்சிகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் மேம்பட்ட செயல்திறனையும் ஏற்படுத்தியுள்ளன. விவசாயிகளை தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், அதிகாரம் பெற்றவர்களாகவும், வளமானவர்களாகவும் மாற அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சேவைகள் நவீன விவசாயம் மற்றும் நவீன உள்கட்டமைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, பிரதமர் திரு நரேந்திர மோடியின் அரசு ஒரு சிறந்த எதிர்காலத்திற்கான அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

- S.மோகன்

# முயன்றால் முடியும்!



கோவை மருதமலை வனப் பகுதியில் கடந்த மே 20 அன்று உயிரிழந்த 18 வயதுப் பெண் யானையின் வயிற்றில் நெகிழி (பிளாஸ்டிக்) கழிவுகள் இருந்தது வன விலங்கு ஆர்வலர்களைக் கவலைகொள்ளச் செய்திருக்கிறது. யானையின் பெருங்குடலில் சாணத்துடன் நெகிழிக் கழிவுகள், அலுமினிய தாள்கள் (ஃபாயில்), உணவுப் பொருள்கள் அடைக்கப் பயன்படுத்தப்படும் நெகிழிப் பைகள் உள்ளிட்டவை இருந்ததே அது உயிரிழக்க காரணம் என, யானைக்கு நான்கு நாள்களுக்கும் மேல் சிகிச்சை அளித்த கால்நடை மருத்துவ அலுவலர் சுகுமார் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாகவே, கோவை மாவட்டத்தையொட்டி உள்ள மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிக்கு அருகில் உள்ள கிராமங்களுக்குள் உணவு, தண்ணீர் தேடி யானைகள் வருவது தொடர்கதையாகவே மாறிவிட்டிருக்கிறது. மருதமலை அடிவாரப் பகுதி யானையின் வலசைப் பாதை என வனத் துறையின் சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மாநகரப் பகுதிகளில் குப்பை கொட்ட பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் மருதமலை அடிவாரப் பகுதி போன்று மலையையொட்டி உள்ள பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளின் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

மருதமலை வனப் பகுதி அருகே சோமையம்பாளையம் ஊராட்சிக்கு சொந்தமான குப்பைக் கிடங்கு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் செயல்பட்டுவந்துள்ளது. இந்த குப்பைக் கிடங்கை அகற்ற வேண்டும் என வன ஆர்வலர்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் தொடர்ந்து கோரிக்கை விடுத்தபோதும் நடவடிக்கை எடுக்கப்படாததால், இந்தக் கிடங்கு யானையின் உயிருக்கு உலை வைத்துள்ளது. யானையின் இறப்புக்குப் பின்னர் இந்தக் கிடங்கு மூடப்பட்டுள்ளது.

சபரிமலை மலைப்பாதையில் கொட்டப்படும் குப்பைகளை உண்ட இரு யானைகள், இரு மிளா மான்கள் உயிரிழந்ததை அடுத்து இது தொடர்பான வழக்கை தானாகவே எடுத்துக்கொண்ட கேரள உயர்நீதிமன்றம், சந்நிதானம், பம்பை, நிலக்கல், பம்பை முதல் சந்நிதானம் வரையிலான பாதையில் தடை செய்யப்பட்ட நெகிழி பயன்படுத்தப்படுவதை சமரசமில்லாமல் முற்றிலும் கட்டுப்படுத்த வேண்டும் என்று அண்மையில் உத்தரவிட்டது.

சபரிமலை வனப் பாதையில் பல்வேறு வகையான குரங்குகள், மான்கள், இந்திய பெரு அணில், பறவைகளும்கூட நெகிழிக் கழிவுகளை உண்டதால் பாதிக்கப்பட்டுள்ளதை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

கர்நாடக மாநிலம், சாம்ராஜ்நகரில் கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான 3 மாதங்களில் மட்டும் 5 பசுக்கள், 7 ஆடுகள் வயிற்றில் இருந்து நெகிழிக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. ஆந்திர மாநிலம், நந்தியால் நகரத்தில் கடந்த 2023 ஜூனில் உயிரிழந்த சினைப் பசுவின் வயிற்றில் இருந்து 60 கிலோ நெகிழிக் கழிவுகளை மருத்துவர்கள் அகற்றினர். அதேபோன்று, ஹரியாணா மாநிலம் ஃபரிதாபாதில் கடந்த 2021 மார்ச்சில் உயிரிழந்த சினைப் பசுவின் வயிற்றில் இருந்து 71 கிலோ நெகிழிக் கழிவுகள் எடுக்கப்பட்டன. இது நாடு முழுவதும் காணப்படுகிறது.

நெகிழி அறிமுகமான பின்னர், உணவுக் கழிவுகள் உள்ளிட்ட எல்லா குப்பைகளையும் அதில் அடைத்து முடிச்சுபோட்டு கண்ட இடங்களில் தூக்கி எறிகிறோம். உணவு தேடி அலையும் விலங்குகள் முடிச்சை அவிழ்க்க முடியாமல் நெகிழிப் பையையும் சேர்த்து உண்கின்றன.

விலங்குகளுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் பலவிதமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது நெகிழி. மனிதனின் மூளை, சிறுநீரகம், கல்லீரல், ரத்தம், விந்தணு, தொப்புள்கொடி, தாய்ப்பால் ஆகியவற்றிலும் நுண் நெகிழித் துகள்கள் இருப்பது அமெரிக்காவின் நியூமெக்ஸிகோ பல்கலைக்கழகம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. மூளையில் படியும் நுண் நெகிழித் துகள் மறதி நோய்க்கு காரணமாகிறது என்ற அந்த ஆய்வு முடிவை அப்போதைய மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் சுப்ரியா சாஹு குறிப்பிட்டிருந்தது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இது மட்டுமின்றி, நெகிழி பாட்டிலில் அடைக்கப்பட்டுள்ள குடிநீரை ஆபத்தான உணவுப் பட்டியலில் சேர்த்து மத்திய அரசு கடந்த டிசம்பரில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. ரூ.10, ரூ.20 என விற்கப்படும் நெகிழியாலான குடிநீர் பாட்டில்களை மீண்டும் பயன்படுத்த வேண்டாம் என்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

ஓடைகள், கால்வாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் நெகிழி உறைகள் தூக்கி எறியப்படுவதால், மழைக்காலங்களில் அடைப்பு ஏற்பட்டு வெள்ளம் வடிய வழிஇல்லாமல் நகரமே வெள்ளக்காடாகி வருவதை சென்னை உள்ளிட்ட பல பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக கண்டுவருகிறோம்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் 9 லட்சம் டன் நெகிழி பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம், சுமார் ரூ. 18,000 கோடி வருவாய் ஈட்டப்படுகிறது. 8,000-த்துக்கும் மேற்பட்ட குறு, சிறு நிறுவனங்கள் மூலம் 10 லட்சம் பேர் நெகிழி உற்பத்தித் தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக நெகிழிப் பயன்பாட்டைக் கைவிடுதல் சாத்தியமில்லை என்பது மட்டுமல்ல, அவசியமும் இல்லை. ஆனால், நெகிழிப் பைகளையும் , குடிநீர் பாட்டில்களையும் நம்மால் தவிர்க்க முடியும். தமிழக முதல்வர் முன்மொழிந்த "மஞ்சப்பைத் திட்டம்' முனைப்புடன் செயல்வடிவம் பெறாதது துரதிருஷ்டவசமானது.

நெகிழிப் பைகளைப் பயன்படுத்த மாட்டேன் என்று ஒவ்வொருவரும் உறுதியேற்பது மட்டுமே இந்தப் பிரச்னைக்குத் தீர்வாக அமையும்.

- **K.கலைமணி**

# ஜூலை 25 முதல் தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம்: அன்புமணி ராமதாஸ் அறிவிப்பு

பெரும் கொடுமைகளிலில் இருந்தும், பெரும் துன்பங்களில் இருந்தும், பெரும் நெருக்கடிகளில் இருந்தும், வள்ளுவரால், ''அல்லவை செய்தொழுகும் வேந்து'' என்று விமர்சிக்கப்பட்ட கொடுங்கோன்மையில் இருந்தும் உடனடியாக மீட்டெடுக்கப்பட வேண்டிய ஒரு பிரிவு மக்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் திமுக ஆட்சியின் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு மக்கள் தான். அவர்களைக் காப்பாற்றுவது தான் பொறுப்புள்ள அரசியல் கட்சியின் கடமை என பா.ம.க. கருதுகிறது.

தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதை விட, நல்லாட்சி வழங்குவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதில் தான் தமிழக அரசு தீவிரம் காட்டி வருகிறது. தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்படுவதாகவும், அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பது போன்றும் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தான் தமிழ்நாட்டு அரசு ஈடுபட்டிருக்கிறது. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதைப் போல தமிழகத்தில் நடைபெற்று வரும் விளம்பர மாடல் அரசால் தமிழ்நாட்டு மக்களுக்கு எந்த வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பது தான் உண்மை.

சமூகநீதி என்றால் கிலோ என்ன விலை? என்று கேட்கும் அரசு தான் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் 5-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. மத்திய அரசே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப் போவதாக அறிவித்த பிறகும், மாநிலத்தில் சமூகநீதித் தேவைகளைக் கருத்தில் கொண்டு மீண்டும் தனியாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று கர்நாடகம் அறிவித்திருக்கிறது. ஆனால், தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதற்கான அதன் கடமையை தட்டிக்கழித்துக் கொண்டிருக்கிறது. உச்சநீதிமன்ற வழக்கால் ஆபத்துக்குள்ளாகியிருக்கும் 69% இட ஒதுக்கீட்டை பாதுகாப்பது, பல்வேறு சமூகங்களுக்கு அவர்களின் மக்கள் தொகை மற்றும் சமூக பின்தங்கிய




நிலை அடிப்படையில் உள் இட ஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட சமூகநீதிக் கடமைகளை குழி தோண்டி புதைக்கிறது திராவிட மாடல் அரசு.

பள்ளிக்கூடங்கள் தொடங்கி பல்கலைக்கழகங்கள் வரையிலும், சாலைகளில் தொடங்கி ஆலைகள் வரையிலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றவாளிகளை அரசே காக்கும் அவலம் நிலவுகிறது. பெண்களுக்கு எதிரான பிற வன்முறைகளும் தலைவிரித்து ஆடுகின்றன. கல்வி சேவையாக இருந்த நிலை மாறி கொள்ளையாக மாறி விட்டது; அரசு பள்ளிகளில் ஆசிரியர்களே இல்லை; நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின்படி ஒரு லட்சம் ஏழை மாணவர்களுக்கு தனியார் பள்ளிகளில் இலவசக் கல்வி வழங்குவதை கைவிட்டு விட்டது. ஐந்தரை லட்சம் இளைஞர்களுக்கு அரசு வேலை, தனியார் வேலைவாய்ப்புகளில் தமிழக மக்களுக்கு 75% இட ஒதுக்கீடு உள்ளிட்ட எந்த வாக்குறுதியும் திமுக அரசால் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஆட்சிக்கு வந்த நான்காண்டுகளில் ஒரே ஒரு

புதிய மருத்துவக் கல்லூரி கூட கட்டப்படவில்லை; ஒரே ஒரு மருத்துவ மாணவர் சேர்க்கை இடம் கூட அதிகரிக்கப்படவில்லை; அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லை; இலவச மருத்துவ வார்டுகள் படிப்படியாக கட்டண வார்டுகளாக மாற்றப்பட்டு ஏழைகளின் மருத்துவம் பெறும் உரிமை பறிக்கப்படுகிறது. உழவர்களுக்கு ஒன்றுமே செய்யப்படவில்லை. நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களின் கொள்முதல் விலைகளை உயர்த்த மறுக்கும் அரசு, பாசன வசதிகளை செய்து தர தவறிவிட்டது. உழவர்களின் நலன் காக்கும் அரசு என்று கூறிக்கொண்டே அவர்களின் விளைநிலங்களை பறித்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும் பாவத்தை அரசு செய்கிறது.

மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களின் நடமாட்டம் தான் அனைத்து வகையான சமூகக் கேடுகளுக்கும் காரணமாக இருக்கிறது என்று தெரிந்தும் கூட அவற்றைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. படிப்படியாக மதுவிலக்கு என்பதெல்லாம் ஊரை ஏமாற்றும் நாடகம் என்பதை உலகமே தெரிந்து வைத்திருக்கிறது. மக்களுக்கு பொதுச்சேவை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான சட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. சுற்றுச்சூழல் சீரழிவு, போக்குவரத்து வசதி இல்லாமை, தூயக் காற்று கிடைக்காமை போன்றவற்றால் தமிழகம் வாழத்தகுதியற்ற மாநிலமாக மாறி வருகிறது. கல்வியிலும், தொழில் வளர்ச்சியிலும் பின்தங்கிக் கிடக்கும் பகுதிகளை முன்னேற்றுவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் தமிழகத்தின் ஒரு பகுதி வளராமல் முடங்கிக் கிடக்கிறது. மொத்தத்தில் முன்னேற்றுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்களால் தமிழ்நாடு ஏமாற்றப்பட்டுள்ளது.

திமுக அரசின் இந்த அவலங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதும், மக்களிடமிருந்து மோசமான ஆட்சியால் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுக்க வேண்டியதும் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலையாயக் கடமை ஆகும். அந்தக் கடமையை நிறைவேற்றும் வகையில் பசுமைத் தாயகம் நாளான ஜூலை 25-ம்தேதி தொடங்கி, தமிழ்நாடு நாளான நவம்பர் ஒன்றாம் தேதி வரை மொத்தம் 100 நாட்கள் கால அளவில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இந்த பயணம் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் தொடங்கவுள்ளது.

கீழ்க்கண்ட உரிமைகளை வென்றெடுப்பது தான் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் மேற்கொள்ளவுள்ள பயணத்தின் நோக்கங்கள் ஆகும். விரிவான பயணத் திட்டம் அடுத்த சில நாள்களில் வெளியிடப்படும்.

1. சமூக நீதிக்கான உரிமை (Right to Social Justice)

2. வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை (Women’s Right to Live Free from Violence)

3. வேலைக்கான உரிமை (Right to Employment)

4. விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை (Right to Farming & Right to Food)

5. வளர்ச்சிக்கான உரிமை (Right to Development)

6. அடிப்படை சேவைகளுக்கான உரிமை (Right to Public Services)

7. கல்வி, நலவாழ்வுக்கான உரிமை (Right to Health & Right to Education)

8. மது & போதைப் பொருள்களால் பாதிக்கப்படாமல் இருக்கும் உரிமை (Right to be Free from Alcohol & Drug Harm)

9. நீடித்திருக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிமை (Right to Sustainable Urban Development)

10. ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை (Right to a Healthy Environment)

தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம் ஓர் அரசியல் கட்சிக்கானது அல்ல. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கானது. எனவே உன்னத நோக்கம் கொண்ட இந்தப் பயணத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பெருமளவில் பங்கேற்று ஆதரவளிக்கும்படி பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

- **வீ.அய்யனார்**

# கேரளத்தில் கப்பல் விபத்து:
## ஆபத்தான பொருள்களைப் பற்றி தகவல் தெரிவியுங்கள்:
## தலைமைச் செயலர் வேண்டுகோள்




**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 30.05.2025 அன்று தலைமைச் செயலகத்தில், எல்சா-3 கப்பல் விபத்தால் கடலோர மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, இ.ஆ.ப, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

கேரள கப்பல் விபத்தால் கடற்கரைப் பகுதிகளில் ஆபத்தான பொருள்கள் ஏதும் கண்டறியப்பட்டால் தகவல் தெரிவிக்க வேண்டுமென தலைமைச் செயலர் நா.முருகானந்தம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கேரள கடற்கரையில் 38 கடல் மைல் தொலைவில் எல்சா 3 என்ற கப்பல் விபத்துக்குள்ளானது. அதிலிருந்த எரிபொருள், பிளாஸ்டிக் துகள்கள், ஆபத்தான பொருள்கள் கொண்ட பெட்டகங்கள் கடலில் விழுந்தன. வலுவடைந்த தென்மேற்கு பருவமழையின் காரணமாக பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் உள்பட பிற பொருள்கள் கேரள மாநிலத்தின் கடற்கரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையிலும் கரை ஒதுங்கி வருகின்றன.

**தலைமைச் செயலர் ஆலோசனை:** இந்த பிரச்னை குறித்து தலைமையில், தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை ஆலோசனை நடைபெற்றது. அதில் தலைமைச் செயலர் நா.முருகானந்தம் பேசியதாவது:-

பிளாஸ்டிக் துகள்கள் கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையில் கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்பட்டவுடன் குமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுக்கும், தொடர்புடைய அனைத்து அரசுத் துறையினருக்கும் அறிவுரைகளும், வழிகாட்டு நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்னை குறித்து அறிவியல் வல்லுநர்களின் கருத்து கேட்டறியப்பட்டது.

பிளாஸ்டிக் துகள்களை அகற்ற தன்னார்வலர்கள் மூலம் பாதுகாப்பான முறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காவல், தீயணைப்பு, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளை ஒருங்கிணைத்து பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. கால்நடை, பால்வளம், மீன்வளத் துறையின் மூலமாக மீன்கள், கடல்வாழ் உயிரினங்கள் மீதான தாக்கத்தைக் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் மற்றும் சந்தேகத்துக்குரிய பொருள்கள் கடலிலோ, கடற்கரையிலோ கண்டறியப்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்துக்கும் காவல் துறைக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும். இப்போதைய நிலவரப்படி எந்தவித ஆபத்தான பொருள்களும் தமிழகக் கடற்கரையில் ஒதுங்கவில்லை. பொதுமக்களின் உயிர் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருவதாக தலைமைச் செயலர் நா.முருகானந்தம் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், வருவாய் நிர்வாக ஆணையர் எம்.சாய்குமார், வருவாய்த் துறை கூடுதல் தலைமைச் செயலர் பெ.அமுதா, சுற்றுச்சூழல் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், கால்நடை, பால்வளம், மீன்வளத் துறை செயலர் என்.சுப்பையன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**- அன்புமணி**

# பதிவுத்துறையில் தனி மரியாதை!




ஒரு மாநிலத்தின் வளம் மக்களின் வாங்கும் சக்தியையும், அவர்களுக்கு உள்ள சொத்துகள் வாங்கும் சக்தியின் அளவையும் வைத்து மதிப்பிடப்படுகிறது. மாநிலத்தின் வரி வருவாயில் பதிவுத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. சொத்துகளை வாங்கும்போதும், அதை விற்கும் போதும் எழுத்துப்பூர்வமாக பத்திரங்களில் எழுதி அதை பதிவு செய்யும்போதுதான் சட்டப்பூர்வமான பாதுகாப்பு, அங்கீகாரம், நிரந்தரத்தன்மை கிடைக்கும். தமிழ்நாட்டில் பல்வேறு அரசு துறைகளில் ஒன்றாக பத்திரங்களை பதிவு செய்யும் பதிவுத்துறை இயங்குகிறது. தமிழ்நாட்டில் பதிவுத்துறை 1864-ம் ஆண்டில் இருந்து இயங்கி வருவது தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்ப்பதாக இருக்கிறது.

முதல் பத்திரம் வடக்கு மெட்ராஸ் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1865-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந்தேதி பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த பத்திரம் இப்போதும் பதிவுத்துறையால் பராமரிக்கப்பட்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது. அப்போது கைலாச ஆரோக்கிய முதலி என்பவர் ராயபுரத்தில் ஒரு கிரவுண்டு 352 சதுர அடி இடத்தை ரூ.500-க்கு, ஒரு ஆங்கிலேய நிறுவனத்துக்கு விற்று இருக்கிறார். இதற்கு முத்திரை தாள் கட்டணம் ரூ.8 ஆக இருந்திருக்கிறது. 1865-லிருந்து 1874 வரை கர்னல் ராபர்ட் மக்கன்சி மக்டொனால்ட் பதிவுத்துறை தலைவராக இருந்திருக்கிறார். அவரைத்தொடர்ந்து 6 ஆண்டுகளுக்கு ராம் அய்யங்கார் இந்த பதவியில் இருந்திருக்கிறார் என்ற குறிப்பு இப்போதும் பதிவுத்துறையிடம் இருக்கிறது.

பதிவுத்துறை தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே ரூ.1 லட்சத்து 42 ஆயிரத்து 871 வருவாய் ஈட்டி-யிருக்கிறது. அப்படி தொடங்கப்பட்ட பதிவுத்துறையின் கட்டுப்பாட்டில் இப்போது மாநிலம் முழுவதும் 587 சார்பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. கடந்த 2024-25-ல் மட்டும் தமிழ்நாட்டில் 33 லட்சத்து 59 ஆயிரத்து 150 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு, 21 ஆயிரத்து 968 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தற்போது முத்திரைத்தாள் கட்டணமாக மொத்த சொத்து மதிப்பில் 7 சதவீதமும், பதிவு கட்டணமாக 2 சதவீதமும் வசூலிக்கப்படுகிறது. அனைத்து ஆவண பதிவுகளின்போதும் ஆவணச்சொத்தின் புகைப்படத்துடன் அதன் புவிசார் அச்சுகளையும் ஆவணத்தில் இணைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

பத்திரப்பதிவு அலுவலகங்களில் சொத்துகள் பதிவு மட்டுமல்லாமல் திருமணங்களும் பதிவு செய்யப்படுகின்றன. இப்போது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் பத்திரப்பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் சார்பதிவாளர் அலுவலகங்களில் பல சீர்திருத்தங்களை செய்துவருகிறார். அதில் ஒரு பகுதியாக அனைத்து சார்பதிவாளர் (சப்-ரெஜிஸ்திரார்) அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் அங்குள்ள சார்பதிவாளர் மேஜைக்கு எதிரிலும் உதவியாளர், இளநிலை உதவியாளர் மேஜைக்கு எதிரிலும் நின்றுக்கொண்டு பேசும் நிலை இனி இருக்காது. ஒவ்வொரு அலுவலருக்கும் முன்பு குறைந்தபட்சம் 2 நாற்காலிகள் போடப்பட்டு இருக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

பத்திரப்பதிவு அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களை நாற்காலியில் உட்கார வைத்துத்தான் சார்பதிவாளர்கள் பேசவேண்டும். எந்த சூழ்நிலையிலும் அவர்களை நிற்க வைத்துக்கொண்டு பேசக்கூடாது. யாரையாவது நிற்க வைத்து பேசியதை உயர் அதிகாரிகள் கண்காணிப்பு கேமராக்களில் பார்த்துக்கொண்டு இருக்கும்போது, கண்டுபிடித்தால் துறை ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதிவுத்துறை அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் இந்த தனி மரியாதை வரவேற்புக்குரியது. இதுபோல அரசு அலுவலகங்களுக்கும் வரும் அனைவரையும் உட்கார வைத்து பேசும் நடைமுறை வந்தால் மிகவும் சிறப்புக்குரியதாக இருக்கும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

- **தமிழ்வீரன்**

# யார் இந்த சண்டிகேஸ்வரர்?
## சண்டிகேஸ்வரர் முன்பு கை தட்டலாமா?

சிவன் கோவில்களில் சண்டிகேஸ்வரர் சன்னதியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிலர், அந்த சன்னதியை அடைந்ததும் பவ்வியமாக கை தட்டுவார்கள். இன்னும் சிலர் பலமாக கை தட்டுவார்கள். மேலும் சிலர் அமைதியாக கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள்.

உண்மையிலேயே இப்படிச் செய்யலாமா? அதற்கு முன், யார் இந்த சண்டிகேஸ்வரர் என்று பார்த்து விடுவோம். சோழநாட்டில் சேய்ஞ்ஞலூர் என்ற திருத்தலம் உள்ளது. இங்கு எச்சதத்தன்-பவித்திரை தம்பதியினர் வசித்தனர். இவர்களது மகன் விசாரசருமன். இவன் சிறு வயதிலேயே சிவபக்தி கொண்டவனாக வளர்ந்தான்.

பசுக்களை மேய்க்கும் தொழிலை மேற்கொண்டதால் பசுக்கள் இவனை தாங்கள் உயிராக கருதின. மாடு மேய்க்க செல்லும் இடத்தில் மணலில் சிவலிங்கம் வடிப்பது இவனது வழக்கம். மேய செல்லும் பசுக்கள் அதன்மேல் பாலை சுரந்து அபிஷேகம் செய்யும். இவ்வாறு சிவ சேவை செய்த பசுக்கள் வீட்டுக்கு வந்த பிறகும் தங்கள் எஜமானர்களுக்கும் தேவையான பாலை சுரந்து கொடுத்து வந்தன.

ஒருமுறை அந்த ஊர் இளைஞன் ஒருவன் சிவலிங்கம் மீது பசுக்கள் பால் சுரந்ததை பார்த்து விட்டான். அத்துடன், விசாரசருமன் அதை கண்டு கொள்ளாமல் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி ஆனான். ஊருக்குள் சென்று நடந்த விவரத்தை தெரிவித்தான். மாடுகளின் உரிமையாளர்கள் இதுகுறித்து எச்சதத்தனிடம் சொல்லி, மகனை கண்டிக்கும்படி கூறினர்.

அவர் உண்மையை அறிய ஒருநாள் மாடு மேய்க்கும் இடத்துக்கு வந்து மறைந்து நின்று கவனித்தார். மாடுகளின் உரிமையாளர்கள் கூறியபடியே மண் லிங்கத்தின் மீது பசுக்கள் பாலை சொரிந்தன. விசாரசருமன், அந்த மணல் லிங்கத்தின் முன் ஆழ்ந்த தியானத்தில் இருந்தான்.

அதைப் பார்த்த எச்சதத்தனுக்கு கோபம் வந்து விட்டது. மகனை உதைத்து கண்டித்தார். மேலும், மணல் லிங்கத்தை காலால் மிதித்து உடைத்தும் விட்டார். இதனால் கோபம் அடைந்த அவரது மகன் விசாரசருமன், அவரது கால் மீது தன் கையில் இருந்த குச்சியை எறிந்தான். அது சிவன் அருளால் கோடரியாக மாறி அவரது காலை காயப்படுத்தியது.

அளவு கடந்த பக்தி காரணமாக தந்தையையே தாக்க துணிந்த அந்த அதி தீவிர பக்தன் முன்பு பார்வதி தேவியுடன் தோன்றினார் சிவன்.

எச்சதத்தனின் காயத்தை மறையும்படி செய்தவர்,



விசாரசருமனுக்கு சிவ கணங்களை நிர்வாகம் செய்ய சண்டிகேச பதவியை வழங்கினார். அதோடு, தனக்கு சூட்டப்படும் மாலை, நைவேத்யம் ஆகியவை அவருக்கே தினமும் வழங்கப்படும் எனவும் அருள்பாலித்தார்.

இதன்படி சிவனுக்கு அணிவித்த மாலையையே சண்டிகேஸ்வரருக்கும் அணிவிக்கும் பழக்கம் இருக்கிறது. சிவன் கோவிலுக்கு வருபவர்கள் சண்டிகேஸ்வரை வணங்காமல் சென்றால் அவர்கள் ஆலயத்துக்கு வந்த பலன் கிடைக்காது என்பது நம்பிக்கை.

சண்டிகேஸ்வரர் சிவ தியான நிலையில் இருப்பவர். இவர் முன் பலர் கை தட்டி வணங்கி சுற்றி வருகின்றனர். இவ்வாறு செய்தால் இவரது தியானம் கலைந்து விடும் என்பது ஐதீகம். சிவ ஆலங்களில் சண்டீகேஸ்வரர் முன் கை தட்டுவது ஒரு பெரிய பாவ செயல்.

மேலும் சண்டீகேஸ்வரர் சிவபக்தர் மட்டும் இல்லை சிவனின் சொத்துகளை பாதுகப்பவர்.

எனவே சிவஆலயங்களை விட்டு செல்லும் முன் சண்டிகேஸ்வரர் முன் சென்று மெதுவாக சத்தம் வராமல் கைகளை துடைத்து, சிவன் கோயில் சொத்து எதையும் நாம் எடுத்து செல்லவில்லை என்பதை சண்டீகேஸ்வரர் தியானம் கலையாமல் செய்யவேண்டும்.

இதுவே மறையாகும் தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இதனை தெரிவிப்பது நமது கடமையும் அல்லவா!

அதனால் அவர் முன்பு கை தட்டி வணங்காமல் அமைதியாக வணங்குவதே சரியானது. சண்டிகேஸ்வரரை வணங்கினால் மன உறுதியும், ஆன்மிக பலமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

- V.சந்தோஷ் குமார்

# அடுத்தடுத்து யானைகள் இறப்பது ஏன்? விசாரணைக்கு வனத்துறை உத்தரவு!

தமிழகத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில், அடுத்தடுத்து யானைகள் இறப்பது குறித்து, துல்லிய விசாரணை மேற்கொள்ள வனத்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில், 2024ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 3,063 யானைகள் இருப்பது உறுதியாகி உள்ளது. இதில் ஆண்டுக்கு, 110 யானைகள் இறப்பதும், ஆய்வுகள் வாயிலாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் கடந்த ஐந்து மாதங்களில், 25 யானைகள் இறந்துள்ளன. அவற்றில் இரண்டு யானைகள் மட்டுமே, இயற்கைக்கு மாறான வகையில் கொல்லப்பட்டதாக வனத்துறை சொல்கிறது.

**மருத்துவர் குழு**

கோவையில் மருதமலை அடிவாரத்தில், குட்டியுடன் ஒரே இடத்தில் நின்றிருந்த ஒரு பெண் யானை பற்றிய தகவல் வனத்துறைக்கு கிடைத்தது.

அந்த யானை உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு இருந்ததால், கால்நடை மருத்துவர்கள் குழுவினர் சிகிச்சை அளித்தனர். ஆனாலும், மே 20ல் இறந்தது.

இதையடுத்த சில நாட்களில், கோவை மதுக்கரை வனச்சரகத்துக்கு உட்பட்ட கரடிமடை பகுதியில், ஒரு பெண் யானை, நீண்ட நேரம் ஒரே இடத்தில் படுத்து கிடந்தது. அதுவும் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு இருந்தது. கால்நடை மருத்துவர் குழுவினர் சிகிச்சை அளித்தும் பலனின்றி இறந்தது. நீலகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு ஐந்து மாதத்தில்... புலிகள் உயிரிழப்பு அதிகரிப்பு! சிறப்பு குழு அமைத்து விசாரணை நடத்துமா வனத்துறை?

ஐந்து நாட்களுக்குள் ஒரே மாவட்டத்தில் இரண்டு யானைகள் இறந்தது, வனத்துறையினர் மற்றும் வன உயிரின ஆர்வலர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து, வன உயிரின ஆர்வலரும், 'ஓசை' அமைப்பின் தலைவருமான காளிதாசன் கூறியதாவது:

வனப்பகுதிகளிலும் அதை ஒட்டிய இடங்களிலும், யானைகள் இறப்பு குறித்து தகவல்கள் வருகின்றன. வனத்தை ஒட்டிய பகுதிகளில், உள்ளாட்சி அமைப்புகள் பொறுப்பற்ற முறையில் கொட்டும் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் வனப்பகுதிகளில் நீர் மாசுபட்டு இருப்பது இதற்கு காரணமாக இருக்கலாம்.



அத்துடன், வனப்பகுதிகளில் கோடையில் சீமை கருவேல மரங்கள் அதிகமாக வளர்கின்றன. தாவரங்களுடன் சேர்த்து, சீமை கருவேல மர இலைகளை சாப்பிடுவதாலும், விவசாய நிலங்களில் அதிகமாக பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகள் காரணமாகவும், யானைகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

எனவே, இந்த விஷயங்கள் அடிப்படையில் ஆய்வு செய்தால் தான், துல்லியமான காரணம் தெரியவரும். இவ்வாறு அவர் கூறினார்.

**பிரேத பரிசோதனை**

வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

யானைகள் இறக்கும் போது, பிரேத பரிசோதனை செய்து அறிக்கை பெறப்படுகிறது. அந்த அறிக்கையுடன் நின்று விடாமல், சம்பந்தப்பட்ட பகுதிகளில் இதற்கு முன் யானைகள் இறந்ததா என்பது போன்ற விபரங்களை சேகரித்து, துல்லிய விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டு இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

- K. **ரமேஷ்குமார்**

# பூமித்தாயின் மார்பை அறுத்து ரத்தத்தை குடிக்கும் குவாரி உரிமையாளர்கள்

## உயர் நீதிமன்றம் வேதனை!



தீராத பேராசை கொண்ட குவாரி உரிமையாளர்கள், பூமித்தாயின் மார்பை அறுத்து ரத்தத்தை குடிக்கின்றார்கள் என குவாரி விதிமீறல் தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது.

கோவை மாவட்டத்தில், புரவிபாளையம் கிராமத்தில் கே.டி.செந்தாமரை என்பவர் பட்டா நிலங்களில் 2009-ம் ஆண்டு முதல் குவாரிகளை நடத்தி வருகிறார். இவரது குவாரிகளில் விதிமீறல் உள்ளது என ராதாகிருஷ்ணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார்.

இதையடுத்து, உயர் நீதிமன்ற உத்தரவின் படி அமைக்கப்பட்ட குழு 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்த அறிக்கையில் சிறிய அளவில் விதிமீறல் இருப்பதாக கூறப்பட்டது. இதனையடுத்து விதிமீறல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு வழக்கு முடிக்கபட்டது. ஆனால், இந்த அறிக்கையை ஆய்வு செய்த கோவை சப்-கலெக்டர், குவாரியில் இருந்து சட்டவிரோதமாக கனிம வளங்கள் எடுத்ததாக கூறி செந்தாமரைக்கு 32 கோடியே 29 லட்சத்து 77 ஆயிரத்து 792 ரூபாய் அபராதம் விதித்து 2022-ம் ஆண்டு உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து புவியியல் மற்றும் சுரங்கத் துறை கமிஷனரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த கமிஷனர், சப்-கலெக்டர் உத்தரவை ரத்து செய்தார். அபராதத் தொகையை ரூ.2 கோடியே 48 லட்சத்து 9 ஆயிரத்து 119 ஆக குறைத்து, அதில் ரூ.25 லட்சத்தை உடனடியாக செலுத்த வேண்டும். மீதத் தொகையை மாதம் ரூ.8 லட்சம் வீதம் தவணை முறையில் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதற்கிடையில், புவியியல் மற்றும் சுரங்கத் துறை கமிஷனரின் உத்தரவை, தாமாக முன்வந்து இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் விசாரித்தார். கமிஷனர் உத்தரவை ரத்து செய்தும், கோவை சப்-கலெக்டர் விதித்த அபராதத் தொகையை உறுதி செய்தும் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் செந்தாமரை வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி விசாரித்தார். அப்போது, அனைத்து விதமான சுற்றுச்சூழல் அனுமதிகளையும் பெற்ற பின்னரே குவாரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதில் எந்த விதிமீறலும் இல்லை என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

அரசு தரப்பில் கூடுதல் அரசு பிளீடர் ஆஜராகி, அபராத தொகையை குறைத்து புவியியல் மற்றும் சுரங்கத் துறை கமிஷனரின் உத்தரவு எந்த வகையிலும் ஏற்க முடியாதது. அதை ரத்து செய்தது அரசு துறை செயலாளர் உத்தரவு சரியான முடிவு. மனுதாரருக்கு குவாரியை நடத்த உரிமை எதுவும் இல்லை. சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட கனிம வளத்துக்கு இணையான தொகையை அவரிடம் இருந்து வசூலிக்கப்படும் என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவில், சம்மந்தப்பட்ட குவாரிகளில் இருந்து கற்கள், கிராவல் மண் எவ்வளவு எடுக்கப்பட்டுள்ளன? என்ற அட்டவணையே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் உள்ள விவரங்களை மனுதாரர் எதிர்க்கவில்லை. மனுதாரருக்கு 5 குவாரிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் முறையான உரிமம் இல்லாமல் கற்களும், கிராவல் மண்ணும் எடுத்துள்ளார். இந்த குற்றத்துக்காக அவருக்கு 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், 5 லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கும் வகையில் சட்டப்பிரிவுகள் உள்ளன. எனவே சம்பந்தப்பட்ட விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக புகார் அறிக்கையை அரசு அதிகாரிகள் தாக்கல் செய்ய வேண்டும்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட கனிம வளத்துக்கு இணையான தொகையை சம்மந்தபட்டவர்களிடம் இருந்து வசூலிப்பதில் எந்த சமரசமும் இருக்கக்கூடாது. 100 சதவீத தொகையை வசூலிக்கவேண்டும். அதன்படி கோவை சப்-கலெக்டர் சரியான அபராதம் விதித்துள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டமே, நேர்மையற்ற பேராசைக்காரர்களிடம் இருந்து பூமித்தாயை காப்பாற்றுவதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது. ஆனால், தீராத பேராசைக்காரர்களான குவாரி உரிமையாளர்கள், பூமித்தாயின் மார்பை அறுத்து ரத்தத்தை குடிக்கின்றனர்.

ஆனால், சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டிய அந்த துறை கமிஷனரின் இந்த செயல் அதிர்ச்சி அளிக்கிறது. அவருடைய உத்தரவு மனசாட்சி உள்ள ஒருவரால் புரிந்துக் கொள்ளவும், கற்பனை செய்யவும் முடியாத அளவில் உள்ளது. அவரது உத்தரவு மக்களையும், அரசையும் ஏமாற்றும் விதமாகவும், மோசடியாகவும் உள்ளது.

அதுமட்டுமல்ல, உயர் நீதிமன்ற பொதுநல வழக்கு விசாரணையின்போது, குவாரியை மூடி விட்டதாக அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்து விட்டு, மறுபுறம் குவாரியை செயல்பட அனுமதித்துள்ளனர். இதன்மூலம், இந்த உயர் நீதிமன்றத்தையும் அதிகாரிகள் ஏமாற்றியுள்ளனர்.

எனவே, சட்டப்படி ஒட்டுமொத்த அபராத தொகையையும் மனுதாரரிடம் இருந்து அரசு வசூலிக்க வேண்டும். மனுதாரரின் குவாரி உரிமம் 2023-ம் ஆண்டே முடிந்து விட்டதால், அதை ரத்து செய்ய வேண்டிய அவசியம் தற்போது இல்லை. இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் எடுத்துள்ள நடவடிக்கையை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது.

இந்த குவாரி மோசடியில் கள அதிகாரிகள் முதல் உயர் அதிகாரிகள் வரை என்ன பங்கு உள்ளது? என்பது குறித்து லஞ்ச ஒழிப்பு காவல்துறை மூலம் தமிழ அரசு விசாரணை நடத்த வேண்டும். பின்னர், அவர்கள் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது குற்றவியல் சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நீதிபதி பரத சக்கரவர்த்தி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

- S.ஜெயராஜ்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: info@penakural.com, Web: www.penakural.com**

UPI Number:
8754582123

# இந்தியாவில் ஏஐ தயார்நிலை மதிப்பீட்டு முறை குறித்த ஆலோசனை கூட்டம்




தெற்காசியாவிற்கான யுனெஸ்கோ பிராந்திய அலுவலகம், இந்தியா செயற்கை நுண்ணறிவு மிஷன் உடன் இணைந்து, ஜூன் 3 அன்று புதுதில்லியில் இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு தயார்நிலை மதிப்பீட்டு முறை குறித்த பல பங்குதாரர் ஆலோசனையை நடத்தியது. .

புதுதில்லி, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் குவஹாத்தியில் முந்தைய அமர்வுகளைத் தொடர்ந்து, இந்த முன்முயற்சியின் கீழ் ஐந்து பங்குதாரர் ஆலோசனைகளின் தொடரில் இது இறுதியானது.

இந்தியா தனது லட்சிய இந்தியா ஏஐ மிஷனில் இறங்கும்போது இந்த முயற்சி ஒரு முக்கியமான தருணத்தில் வருகிறது. இந்த மிஷனின் மையமானது பாதுகாப்பான மற்றும் நம்பகமான செயற்கை நுண்ணறிவு தூண் ஆகும்,

தெற்காசியாவிற்கான யுனெஸ்கோ பிராந்திய அலுவலகத்தின் இயக்குனர் திரு. டிம் கர்டிஸின் தொடக்க உரையுடன் நிகழ்வு தொடங்கியது, அதைத் தொடர்ந்து மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர், IndiaAI மிஷன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தேசிய தகவல் மையத்தின் தலைமை இயக்குநர் திரு. அபிஷேக் சிங் முக்கிய உரை நிகழ்த்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அரசு, கல்வித்துறை, தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட நிபுணர்கள் கலந்து கொண்டனர். பொறுப்பான செயற்கை நுண்ணறிவு குறித்த செயல்பாட்டு நுண்ணறிவுகளை இந்த கலந்துரையாடல்கள் வழங்கின

தெற்காசியாவிற்கான யுனெஸ்கோ பிராந்திய அலுவலகத்தின் இயக்குனர் திரு டிம் கர்டிஸ், தனது தொடக்க உரையில், ஏஐ 'நெறிமுறைகள்-வடிவமைப்பு' அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். உண்மையான உள்ளடக்கம் என்பது செயல்பாடு மட்டுமல்ல, ஆரம்பத்திலிருந்தே முக்கிய நெறிமுறை மதிப்புகளின் ஒருங்கிணைப்பும் தேவை என்பதைக் குறிப்பிட்டார்.

இந்திய ஏஐ மிஷனின் தலைமை நிர்வாக அதிகாரியும், தேசிய தகவல் மையத்தின் தலைமை இயக்குநரும், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூடுதல் செயலாளருமான திரு அபிஷேக் சிங், தனது முக்கிய உரையில், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவை உருவாக்குவதையும், பாதுகாப்பான, நம்பகமான பயன்பாடுகள் மூலம் இந்தியாவிற்கு வேலை செய்வதையும் நோக்கமாகக் கொண்ட இந்தியாவின் சமநிலையான, புதுமை சார்பு அணுகுமுறையை எடுத்துரைத்தார்.

- L.குமரேசன்


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine
Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect
Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

**PENA KURAL,** Tamil Monthly - June 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**


# TAMILNI PRINTZ & GRAPHICS

**ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS**
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION

DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER



**WEBSITE DESIGN SERVICE**



**APPLY PAN CARD PASSPORT**

**ALL ONLINE SERVICE**



DESIGN **MAGAZINE NEWSPAPER**

ADDRESS: 3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR, CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338